உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 20 சனிக்கிழமை (06-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:282

# திருமலைத் துறைமுகத்தைச் சுற்றி புலிகளின் 13 புதிய முகாம்களாம்!

## எச்சரிக்கின்றது பொ.ஐ.மு.

கொழும்பு,செப்ரெம்பர்06

"திருகோணமலைத் துறைமுகத்துக்குப் புலிகளால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. துறைமுகத்தைச் சுற்றி 13 பெரிய முகாம்களைப் புலிகள் புதிதாக அமைத்துள்ளனர். இந்த முகாம்களில் நன்கு பயிற்றப்பட்ட புலிகளின் படையணிகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எந்த வேளையிலும் திருகோணமலைத் துறைமுகத்தைப் புலிகள் கைப்பற்றக்கூடிய பேராபத்து உள்ளது"

- இப்படி அபாயச்சங்கு ஊதியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி.

பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம, எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இந்த அபாய நிலைமை குறித்துப் பிரஸ்தாபித்தார்.

இச் செய்தியாளர் சந்திப்பில் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, நிமால்சிறிபால டி சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கு சரத் அமுனுகம மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை தொடர்பாகத் தீர்மானங்களை எடுக்கும்போது இந்திய அரசும், இலங்கை அரசும் கலந்தாலோசித்தே முடிவுகளை எடுக்க வேண்டும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் பிரிட்டிஸ் எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் மைக்கல் அன்க்றம் , யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் செயலக அதிகாரிகள் கலந்துகொண்டசமயம் எடுக்கப்பட்ட படம்.
(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## பிரிட்டனில் புலிகள் மீதான தடை சட்டத்துடன் தொடர்புடைய விடயம்

### ஆட்சிமாற்றத்தால் எதுவும் மாறாது என்கிறார் எதிர்க்கட்சி பிரமுகர்



பிரிட்டனில் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்துள்ளமை அரசியல் ரீதியானது அல்ல. அது சட்டத்துடன் தொடர்புடைய விவகாரம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் இந்த விவகாரம் சட்டப்படிதான் கையாளப்படும்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டனின் எதிர்க்கட்சிப்பிரதித் தலைவர் மைக்கல் அன்க்றம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருநாள் விஜயத்தை முடித்துக் கொண்டு யாழ். செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த சமயமே அவர் இப்படிக்கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டனில் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு முரணாகச் செயற்பட்ட அமைப்புக்களைத் தடை செய்துள்ளோம். விடுதலைப் புலிகள் அமைப்பை மட்டுமல்ல.

வன்முறைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என்று விடுதலைப் புலிகள் உறுதி தெரிவிப்பதுடன் நடைமுறையிலும் அதைச் செயற்படுத்திக் காட்டும் பட்சத்தில் தடை நீக்கப்பட வாய்ப்புண்டு.

தடை செய்யப்பட்ட அமைப்புக்கள மீதான தடையை நீக்குவதற்கு அந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ தேசியக்கொடி ஏற்றல்: இங்கும் சர்ச்சை கிளம்புகிறது

யாழ்ப்பாணம்,செப்.6

வரலாற்றுக் கல்வி தொடர்பான செயலமர்வு வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமானபோது அங்கு தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியது.

காலை 9மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமானபோது தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றினார்.

அதன் பின்னர் செயலமர்வு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் தேசியக்கொடி ஏற்றப்பட்டமைக்கான காரணத்தை செயலமர்வு ஏற்பாட்டாளர்களிடம் விசாரித்தனர்.

செயலமர்வின் நோக்கம் குறித்தும் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் அங்கிருந்து திரும்பிக்கொண்டனர்.

அதன் பின்னர் படை அதிகாரிகளும் அங்கு வந்து கொடியேற்றப்பட்டமை குறித்து விசாரித்து விவரம் சேகரித்துக் கொண்டனர்.

இந்தச் சர்ச்சைக்கு மத்தியிலும் செயலமர்வு அமைதியாக நடந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க சமாதான அணியின் உயர் மட்டக்குழு இங்கு வரும்

கொழும்பு,செப்.6

இலங்கையில் தமது பணிகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க சமாதான அணியின்(U.S. Peace Corps) உயர் மட்டக் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு வரவிருக்கிறது. உலகம் முழுவதிலும் கல்வி, சுகாதாரம், எயிட்ஸ் கல்வி மற்றும் அது பற்றிய விழிப்புணர்வு, தகவல் தொழில் நுட்பம், வர்த்தக அபிவிருத்தி, சூழலியல், விவசாயம் போன்ற பரந்துபட்ட துறைகளில் அமெரிக்க சமாதான அணியின் தொண்டர்கள் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க சமாதான அணியின் ஐரோப்பா, மத்திய தரைப்பிரதேசம் மற்றும் ஆசியப் பகுதிச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான கலாநிதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதிதாக 3,500 தாதியரை சேர்த்துக்கொள்ள முடிவு

கொழும்பு,செப்.6

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு புதிதாக 3 ஆயிரத்து 500 தாதிகளைச் சேர்த்துக்கொள்ள சுகாதார அமைச்சு திட்ட மிட்டுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சித்தியெய்தியவர்களில் இருந்து தாதியர் பயிற்சிக்குத் தகுதி பெற்றோர் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தெரிவுசெய்யப்படுவர். இரு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்கு பயிற்சிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தாதிசேவைப் பணிப்பாளர் திருமதி யூ.எஸ்.கே.தெனவத்த தெரிவித்தார்.

தாதிப்பயிற்சிக் கல்லூரிக்கு புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் போது ஏற்கனவே பயிற்சிக்கல்லூரி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளராக கேணல் சுமேத

கொழும்பு, செப்.6

புதிய இராணுவப் பேச்சாளரான கேணல் சுமேத பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

கேணல் சுமேத பெரேரா, கஜபா படையணியின் அதிகாரியாகப் பணியாற்றியவர்.

இராணுவப் பேச்சாளராகக் கடமையாற்றிய பிரிகேடியர் சனத் கருணாரட்ண, ஹவாயில் பாதுகாப்பு தொடர்பான கேந்திர நிலையத்தில் மூன்று மாத குறுகிய பயிற்சிக்காகச் செல்கிறார். அவர் நாடு திரும்பும்வரை கேணல் சுமேத பெரேரா இராணுவப் பேச்சாளராகப் பணிபுரிவார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

தமிழின உயிர்க்கொலை நினைவு நாள்:

## அடக்க நினைத்தால் அடங்கமறுப்போம்; அழிக்க முனைந்தால் திருப்பி அழிப்போம்!

### புலிகள் மட்டு. அரசியல் பொறுப்பாளர் தெரிவிப்பு

அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்வதன் மூலம், அவர்களை அடக்கி ஒடுக்கிவிட முடியாது. அடக்குமுறையை எதிர்த்துப் போராடுபவர்கள் தமிழ் மக்களே ஆவர்.

- இப்படிக் கூறினார் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழின உயிர்ப்படுகொலை நாள நினைவு நிகழ்வு நேற்று கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் 'ஜோசப்பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஈகச்சுடரினை வீரமரணமடைந்த போராளியின் தாயார் கௌரி மனோகரன் ஏற்றினார். கௌசல்யன் புலிக்கொடி ஏற்றினார். இரு பிள்ளைகளை உரிமைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்த சண்முகம் ராஜநாயகம், படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத் தூபிக்கு அடிக்கல் நாட்டினார்.

அங்கு கௌசல்யன் மேலும் கூறியதாவது:-

எமது விடுதலைப் போராட்டம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு பெற வேண்டும். எதற்காக நாம் இதை ஆரம்பித்தோம் என்பதை ஒவ்வொரு

(16 ஆம் பக்கம் பார்க்க)

### களுத்துறை சிறையில் கைதி தற்கொலை!

களுத்துறைச் சிறைச்சாலையில் கைதியொருவர் நேற்று சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

களுத்துறை சிறையிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த போதே இவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் விற்பனை தொடர்பாகத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த இவர், போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் நேற்று தமிழர் படுகொலை நாள்; உணர்வுபூர்வ அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,செப்.6

தமிழ் மக்களின் படுகொலைகளை நினைவு கூரும் நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன.

இதனை ஒட்டி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல வழிபாட்டுத் தலங்களிலும் நேற்றுக் காலை 6.30 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டது. தொடர்ந்து அங்கு சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன.

பிரதான வீதிகள், சந்திகளில் பதாகைகள், வளைவுகள் என்பன கட்டப்பட்டிருந்தன. மக்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்தே தமது கடமைகளில் ஈடுபட்டனர்.

பாடசாலைகளிலும் இந்தப் படுகொலை நினைவு நாளை ஒட்டி பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

நினைவு நாளை ஒட்டிய பிரதான பொதுக் கூட்ட நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரினை சத்துருக் கொண்டான் படுகொலையில் தனது மூன்று பிள்ளைகளைப் பறிகொடுத்த தாயாரான திருமதி இராசம்மா ஏற்றி வைத்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உயர் பாதுகாப்பு வலயம் குறுக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்

## யாழ்.வந்த பிரிட்டிஷ் குழுவிடம் அரச அதிகாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.6

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறுக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படுவதே யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை தற்போது அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

- இவ்வாறு நேற்று யாழ்வந்த பிரிட்டன் எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் மைக்கல் அன்க்றமைச் சந்தித்த யாழ். அரச அதிபர் மற்றும் அதிகாரிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

பிரிட்டன் எதிர்க்கட்சித் தலைவருடன் அக்கட்சியின் முன்னாள் பொருளாளர் ஆஷ் கிறவ்ற் பிரபுவும் நேற்று யாழ். வந்திருந்தார். இவர்கள் நேற்றுக் காலை 10.30 மணிக்கு யாழ்செயலகத்தில் அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்தனர். யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தின் அதிகாரிகளும், ஜி.ரி.இஸற், கெயர், போருட் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் தற்போதைய நிலை, அவற்றில் ஏற்பட்டுள்ள தாமதம், பொது மக்களின் மீள்குடியமர்வுக்குத் தடையாக உள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை, நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக பிரிட்டன் எதிர்க்கட்சித் தலைவருக்கு யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் தெளிவாக எடுத்து விளக்கினார்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் பெரும்பாலான மக்களின் சொந்த வாழ்விடங்கள் உள்ளதால் பொது மக்கள் அப்பகுதியில் மீளக் குடியமர முடியாதுள்ளனர். எனவே, உயர் பாதுகாப்பு வலயங்கள் குறுக்கப்பட்டு எமது மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவதே இங்கு மேற்கொள்ளப்படவேண்டிய முதல் நடவடிக்கை என அரச அதிபரும் ஏனைய அதிகாரிகளும் கூட்டாகத் தெரிவித்தனர்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளதால் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலுள்ளது. இதனால் மக்களும் மீளக் குடியமர முடியாமல் உள்ளதென கூட்டத்தில் கலந்துகொண்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய முக்கிய திட்டங்கள் தொடர்பாக பிரதி தலைவர் கூட்டத்தில் கேட்டறிந்தார். வீடமைப்பு, குடிதண்ணீர், கல்வி, வீதியமைப்பு, மரநடுகை, மிதிவெடி அகற்றல், பாடசாலைகள் புனரமைப்பு, கைத்தொழில் அபிவிருத்தி ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது என கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் பின்னர் பிரிட்டன் குழுவினர் யாழ். குடாநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

'எக்கோ' (ECHO) என்ற நிதி முகவர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் திருப்தியில்லை என அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் தெரிவித்தனர். இந்நிதி நிறுவனத்தினால் பெருமளவான நிதி அபிவிருத்திக்கென வழங்கப்படுகின்ற போதும் அவை இங்கு சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லையெனவும், அகதிகளுக்கான ஐநா.தூதரகத்துக்கு (யுன்.எச்.சி.ஆர்) ஆயிரம் மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்ட போதும், தற்போது நூறு மில்லியன் ரூபாவுக்கான திட்ட வரைவையே அது தயாரித்துள்ளதாகவும் -

மிகுதிப் பணம் எங்கு செல்கின்றதெனத் தெரியவில்லை எனவும் - இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள் சிறிதாக உள்ளபோதும் அதற்கென அந்நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை அதிகமாகவுள்ளதாகவும் -

எனவே, 'எக்கோ' (ECHO) நிதி நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவரை இங்கு அனுப்பி மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை மதிப்பீடு செய்யவேண்டும் எனவும்-அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். பின்னர் குருநகர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய இடங்களுக்கும் பிரிட்டன் குழுவினர் விஜயம் செய்தனர். (எ-8)

### யாழ். ஆஸ்பத்திரியில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ். போதனா வைத்தியசாலை வளவினுள் ஒருதொகுதி அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நேரில் வந்து அவற்றை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவமனைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கிருஷ்ணானந்தன் சந்திராதேவி, பாக்கிநாதன் ஞானப்பிரகாசம், அன்னம்மா, ஞானப்பிரகாசம் ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகளும் -

அன்னம்மா ஞானப்பிரகாசம், கனகமணி பாலசிங்கம், தவமணிதேவி கதிரவேலு, பாக்கியலட்சுமி சுந்தரலிங்கம், நாகரத்தினம் செல்வநேசன் ஆகியோரின் விசேட அடையாள அட்டைகளும கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ஒ-10)

### மேசைவரிப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் நடத்தப்படவிருந்த மேசை வரிப்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் யாவும் கடந்த மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நாளைமறுதினம் திங்கட்கிழமை வரை அதனை அனுப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

### பல்கலை. அனுமதி படிவங்கள் நாளை முதல் விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.6

2003-2004 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப் படிவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யாழ். முகவர்களான பூபாலசிங்கம் புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-4)

### இரதோற்சவ சிறப்பு மலர்

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. இரதோற்சவத்தை ஒட்டி சுன்னாகம் துர்க்கா எம்ரேஷனேர்ஸ் வழங்கும் சிறப்பு மலர் நாளைய உதயனில் வெளியாகும்.

## பரீஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை

பரீஸ்,செப்.6



பரிஸ், அருள்மிகு ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்தின் ஸ்ரீ பஞ்சமுக விநாயகப் பெருமான் தேர்த்திருவிழா நாளை 7ஆம் திகதி நடைபெறுகிறது.

தேர்த்திருவிழா 7ஆம் திகதி பகல் 11 மணியில் இருந்து 3 மணி வரை நடைபெறும். தேர்த்திருவிழா நிகழ்ச்சியின் போது ஸ்ரீ மாணிக்க விநாயகரும் முருகப்பெருமானும் தேரில் ஏறி பரீஸ் மாநகர் வீதியில் பவனி வரும் காட்சியினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து பரீஸில் இருந்து இலங்கைக்கு நேரடி வர்ணனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீஸ் மாணிக்க விநாயகர் ஆலய தீர்த்தம், சங்காபிஷேகம், ஆவணி ஓணம் ஆகியன 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும். 9ஆம் திகதி இரவு வைரவர் மடை நடைபெறும்.

மேற்படி ஆலய உற்சவம் கடந்த மாதம் 24 ஆம் திகதி கும்பாபிஷேகத்துடன் ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் 36 பிரசவங்கள்

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் 36 பிரசவங்கள் இடம்பெற்றுள்ளதாக மருத்துவமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மின்சார வசதி, பிரசவ உபகரண வசதி, கட்டில், தளபாட வசதி ஆகியவை போதுமான அளவில் இல்லாத நிலையிலும் இப்பிரசவ விடுதிக்கு கடந்த மாதம் 50இற்கு மேற்பட்ட கர்ப்பிணிகள் பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் சிலர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

19 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட தென்மராட்சி, 2 ஆயிரத்து 500 குடும்பங்களைக்கொண்ட பச்சிலைப்பள்ளி, 750 குடும்பங்களைக் கொண்ட வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு பிரசவத்திற்கென வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## கொழும்புத்துறையில் பொலிஸார் சோதனை

கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாரின் வீதி ரோந்து மற்றும் சோதனைகள் இடம்பெற்றன.

கொழும்புத்துறைப் பகுதிக்கு திடீரென வந்த பொலீஸார் அப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டனர். பெரும் எண்ணிக்கையில் வந்த பொலீஸார் பிரதான வீதி மற்றும் ஏ.வி.றோட் ஆகிய இடங்களில் கடமையில் ஈடுபட்டனர்.

இரவு 8 மணிக்குப் பின்னர் அப்பகுதியூடாகச் சென்ற இளைஞர்கள் அனைவரும் பொலீஸாரால் மறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன், ரோந்து நடவடிக்கையிலும் பொலீஸார் ஈடுபட்டனர். (ஐ-10-17)







நேற்று யாழ். வருகைதந்த பிரிட்டிஷ் எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் மைக்கல் அன்க்றம் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரைநிகழ்த்துவதை முதலாவது படத்திலும், கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதேச செயலர்கள் மற்றும் செயலக அதிகாரிகளையும், ஹலோட்ரஸ்ட் அமைப்பின் பிரதிநிதிகளையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## சட்டவிரோதமாக அகழப்பட்ட மணல் பாடசாலைக்கு அளிப்பு

### மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

தெல்லிப்பழை,செப்.6

சட்டவிரோதமாக அகழப்பட்டதன் காரணமாக பொலீஸாரால் பிடிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் பறிக்கப்பட்டிருந்த மணல் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் சரோஜினி இளங்கோவனின் உத்தரவின் பேரில் அச்சுவேலி திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலைக் கட்டட வேலைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் சட்டவிரோதமாக அகழப்பட்டு லொறியிலும், உழவு இயந்திரத்திலும் ஏற்றிவரப்பட்ட போது பொலீஸாரால் பிடிக்கப்பட்ட மணல், மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் பறிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகளின் முடிவில் இம்மணலை அச்சுவேலி திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையின் கட்டட வேலைகளுக்கு வழங்குமாறு மல்லாகம் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவின்படி கடந்த திங்கட்கிழமை அப்பாடசாலைக்கு மணல் வழங்கப்பட்டது. (ஒ-150)

## தீவகத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கக்கிளைகள் காலை 6மணிக்கு திறக்கப்படும்

### கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,செப்.6

தீவகத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளைகளை அதிகாலை 6மணி முதல் மாலை 6 மணிவரை திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் தீவகத்தில் இயங்கும் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் முகாமையாளர்களுக்கான கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அன்றாடம் வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் காலையிலோ அல்லது மாலையிலோ பொருள்களை வாங்கவசதியாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இதனை விட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் மக்களிடமிருந்து பொருள்கள் கொள்வனவு செய்து விற்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-12)

# அமெரிக்காவின் பிரேரணையை ஜேர்மன், பிரான்ஸ் ஏற்க மறுப்பு

ஈராக்கிற்கு அமைதிப்படைகளை அனுப்பவேண்டும் எனவும், அதன் நிர்வாகத்திற்குத் தேவையான பண உதவிகளை உலக நாடுகள் வழங்கவேண்டும் எனவும் அமெரிக்கா ஐ.நா.சபையில் சமர்ப்பித்த பிரேரணையை ஜேர்மனும் பிரான்ஸும் ஏற்க மறுத்துள்ளன.


அமெரிக்கா, ஈராக்கில் பணியாற்றவுள்ள அமைதிப்படையினருக்கு தானே தலைமைவகிப்பதாக இந்தப் பிரேரணையில் குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டியே மேற்படி நாடுகள் இரண்டும் இந்தப் பிரேரணையை ஏற்கமறுத்துள்ளன.

ஈராக்கின் அரசியல் நடவடிக்கைகளை அமெரிக்கா அடியோடு கைவிடவேண்டும் என்று கூறியுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி சிராக், அமெரிக்கா ஐ.நா. சபையில் இந்தப் பிரேரணையை சமர்ப்பித்ததற்கு கண்டனமும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றது என்று கூறியுள்ள ஜேர்மன் ஜனாதிபதி ஸ்ரோடர், இந்தப் பிரேரணை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இது குறித்து ஜேர்மன், பிரான்ஸ் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

ஜேர்மனும், பிரான்ஸும் இந்தப் பிரேரணையை ஏற்க மறுத்திருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க



வெளியுறவு அமைச்சர் கொலின் பவல், ஈராக்கியர்களிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கான ஒரு கால அட்டவணையை ஜேர்மனும் பிரான்ஸும் தரவில்லையே என்று கூறியுள்ளார்.

ஈராக்கின புதிய அரசியல் யாப்பையும், தேர்தல் ஏற்பாடுகளையும் குறிக்கும் கால அட்டவணையையும் உள்ளடக்கியதான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி ஈராக் இடைக்கால நிர்வாகத்திடம் தனது பிரேரணையில் கூறியுள்ள அமெரிக்கா, அதற்கான காலவரையை தனது பிரேரணையில் குறிப்பிடவில்லை.

இந்தக் குறைபாட்டை ஜேர்மனும், பிரான்ஸும் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன், ஈராக் இடைக்கால நிர்வாகம் தனது அறிக்கையை அமெரிக்காவிடம் கையளிக்காது. ஐ.நா.விடமே அதனைக் கையளிக்கவேண்டும் என்றும் அந்த நாடுகள் கூறியுள்ளன.

மேலும், ஈராக்கிற்கு தமது படையினரை அனுப்பும் திட்டம் பற்றி அந்த நாடுகள் கருத்துக்கூற மறுத்துள்ளன.

இது இவ்வாறிருக்க, அமெரிக்காவின் பிரேரணையை ஆதரித்து ஈராகிற்கு படைகளை அனுப்ப ஆதரவு தெரிவிக்கும் வகையில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஐ.நா.வில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரேரணை குறித்து வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று ஐ.நாவில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர். இன்று பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகள் பதினைந்தும் பிரேரணை குறித்து ஆராயவிருக்கின்றன.

இந்தப் பிரேரணையை சிரியா, பல்கேரியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் வரவேற்றுள்ளன.

# ஈராக்கிற்கு ரம்ஸ்பீல்ட் நேற்று திடீர் விஜயம்


அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்ட் நேற்று ஈராக்கிற்கு திடீர் விஜயம் செய்தார்.

ரிக்ரித் நகருக்கு உலங்குவானூர்தி மூலம் சென்றிறங்கிய அவர், அங்குள்ள நான்காவது அமெரிக்கப்படையணியுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அவர்கள் மத்தியில் அவர் உரையாற்றியபோது:-

சதாமின் பாத் கட்சியின் மிச்ச சொச்சங்கள் விரைவில் அழிக்கப்படுவார்கள். உங்கள் பணி மிகவும் கடினமானவையும் சிக்கலானவையும் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. போரில் காயப்பட்டவர்களை இராணுவ வைத்திய சாலைக்குச் சென்று நான் பார்த்தேன். நீங்கள் பலரை இழந்துள்ளீர்கள் என்பது எனக்குத் தெரியும் என்று அவர் தெரிவித்தார்.

முன்னறிவித்தல் ஏதுமின்றி அவர் ஈராக் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



பக்தாத்தில் ரோந்து சுற்றும் ஈராக்கின் புதிய படையினர்.

# தேர்தல் பிரசாரத்தின் போது ஆர்னோல்ட் மீது முட்டை வீச்சு

அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாண ஆளுநர்தேர்தலில் போட்டியிடும் ஆர்னோல்ட், தேர்தல் பிரசாரத்துக்காக சென்றவேளை அவர் மீது பழுதடைந்த முட்டை வீசப்பட்டது. ஆனால், அவர் அதனைப் பொருட்படுத்தாமல் அங்கு தனது வேலையில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

அடுத்தமாதம் 7ஆம் திகதி கலிபோர்னிய மாகாண ஆளுநர் தேர்தல் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இருந்த ஆளுநர் மீது புகார் எழுந்ததைத் தொடர்ந்து அவரைப் பதவி நீக்கம் செய்ய முடிவெடுக்கப்பட்டதையடுத்து ஆளுநர் தேர்தல் குறித்து அறிவிக்கப்பட்டது.

இந்தத் தேர்தல், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் போல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

ஹொலிவூட்டின் அதிரடி அக்ஷன் ஹீரோ ஆர்னோல்ட்டை எதிர்த்து பல வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அவர்களில் அமெரிக்காவின் கவர்ச்சி நடிகை மேரிகோரியும் ஒரு வேட்பாளர்.

ஆர்னோல்ட்டை எதிர்த்து நிற்கும் வேட்பாளர்களில் சிலர் போட்டியிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டனர். ஆனால், நடிகை மேரிகோரி இன்னும் வாபஸ் வாங்கவில்லை.

இந்த நிலையில், ஆர்னோல்ட் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார். பல்வேறு இடங்களில் தேர்தல் பிரசாரம் செய்துவிட்டு அவர் கலிபோர்னியா பல்கலைக் கழகத்துக்கு வந்தார்.

அங்கு அவருக்கு மாணவர்கள் உற்சாக வரவேற்புக் கொடுத்தனர். ஆனால், அவரை எதிர்க்கும் ஒரு சில மாணவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். மேடையில் ஆர்னோல்ட் பேசிக் கொண்டிருந்த போது ஒருவர் திடீரென மேடை அருகே வந்து அவர் மீது பழுதடைந்த முட்டையை வீசினார். முட்டை அவரது முகத்தில் பட்டு உடைந்து அவரது சட்டையில் வழிந்தது.

அசடு வழிய ஆர்னோல்ட் அதைத் துடைத்துக் கொண்டார். சினிமாவில் வருவது போல் அவருக்கு கோபம் வரவில்லை. அமைதியாக அந்த சட்டையைக் கழற்றி உதவியாளரிடம் கொடுத்தார். சிரித்துக் கொண்டே தனது பேச்சை அவர் மீண்டும் தொடர்ந்தார். (ம)





தனது ஆதரவாளர்களுடன் தேர்தல் பிரசாரத்தில் ஆர்னோல்ட்...

# ஜனாதிபதி புஷ்ஷிற்கு எதிராக அமெரிக்காவில் கண்டனங்கள்

நியூயோர்க்,செப்.6

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தனது நாட்டுப் பொருளாதாரத்தையும் ஈராக்கையும் நிர்வகிக்கும் முறை குறித்து ஜனநாயகக் கட்சி கண்டித்துள்ளது. அத்துடன், காங்கிரஸ் கட்சியும் அவரை புஷ் பரிதாபமாக தோல்வியை தழுவியுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பெருமையையும் தொழில் வாய்ப்பையும் ஜனாதிபதி புஷ் அதல பாதாளத்திற்கு இட்டுச் சென்றுள்ளார் என்றும் -

ஈராக் விடயத்தில் ஐநாவின் உதவியை தற்போது நாடியுள்ள புஷ் இதனை ஏற்கனவே செய்திருக்கலாம் என்றும் -

ஜனாதிபதி புஷ்ஷின் இந்தப் போக்கால் அமெரிக்காவுடனான உலக நாடுகளின் உறவு பாதிப்படைந்துள்ளது என்றும் - ஜனநாயகக் கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி புஷ்ஷை எள்ளி நகையாடுபவர்களிடமே அவர் இப்போது சென்று மண்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் ஆளுநரான ஹேவார்டீன் தெரிவித்துள்ளார். அத்துடன், எழுபது வருடங்கள் கட்டிக் காத்த நாடுகளுடனான நல்லுறவை புஷ் உடைத்துவிட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மாரடைப்பு ஏற்படுகின்ற போது இருமினால் உயிர் பிழைக்கலாம்!

## போலந்து இருதய நிபுணர் கூறுகிறார்

'மாரடைப்பா? இருமினால் போதும் உயிர் பிழைத்து விடலாம்' என்று போலந்து இருதய மருத்துவ நிபுணர் கூறியுள்ளார்.

சாதாரணமாக ஒருவர் இருமிக் கொண்டே இருந்தால் அவர் நோயாளி என்ற முடிவுக்கு வந்து விடுகிறோம். ஆனால், அதே இருமல் இருதய நோயாளிகளுக்கு உயிர் காக்கும் உதவிக்கரமாகிறது என்பது தற்போதைய புதிய கண்டுபிடிப்பாகும்.

போலந்து நாட்டைச் சேர்ந்த இருதய நோய் நிபுணர் டாக்டர் ததேஸ் பெட்லைஸ் இந்தப் புதிய தகவலை வெளியிட்டார். ஐரோப்பிய இருதய நோய்க் கழக ஆண்டுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இது பற்றிக் கூறியதாவது:-

ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படும் போது அவரை இருமச் செய்தால் இரத்த ஓட்டம் துரிதப்படுத்தப்பட்டு உடலின் ஏனைய பாகங்களுக்கும், மூளைக்கும் செல்லும். இது அம்புலன்ஸ் வைத்திய சாலைக்கு வந்து சேர எடுக்கும் இடைப்பட்ட காலத்துக்குள் செய்யும் முதலுதவியாக அமையும். குறிப்பிட்ட காலத்தில் முறையாக இருமச் செய்வதன் மூலம் இருதய துடிப்பை சீராக வைக்க முடியும்.

ஆபத்தான கட்டத்தில் இருக்கும் நோயாளியைக் கூட ஒன்று அல்லது இரண்டு விநாடி இடைவெளியில் ஐந்து தடவைகள் இருமச் செய்ய வைக்கலாம் இதை ஆய்வு மூலம் கண்டுபிடித்துள்ளோம்.

மாரடைப்பு அறிகுறி தென்பட்ட 115 நோயாளிகளுக்கு 365 தடவைகள் பயிற்சி கொடுத்தோம். அதில் 292 தடவைகளில் மாரடைப்பு அறிகுறி மறைந்துவிட்டது. ஆனால், 73 தடவை மட்டுமே மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

மேற்குக் கரையில் மீண்டும் பலஸ்தீனர்களுக்கு எதிரான வன்முறையை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளது. பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான தொடர்மாடி கட்டடமொன்று இஸ்ரேலியர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்படும் காட்சி.



# ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் செச்னியாவில் நேற்று ஆரம்பம்

செச்னியாவில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

ஒருதசாப்த காலமாக அங்கு நடைபெற்ற சண்டைக்கு முடிவு கட்டும் வகையில் ஜனாதிபதி விளாடிமிர் புடின் வகுத்த திட்டத்திற்கு அமையவே தேர்தல் பிரசாரம் நேற்று ஆரம்பமாகியது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலை நிராகரித்துள்ள செச்னிய பிரிவினைவாதிகள் வாக்களிப்பைக் குழப்ப சபதம் பூண்டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் பத்து வேட்பாளர்களில் முன்னாள் முஸ்லிம் மதகுருவான அகமத் ஹாதிரோவ் வெற்றியீட்டுவார் என்று கருதப்படுகின்றது. ஆனால், இவரை பிரிவினைவாதிகள் 'துரோகி' என்று வர்ணித்துள்ளனர்.

இவருக்கெதிராக பிரபல வர்த்தகரான மலிக்சாய் துஸ்யெவ் பலமான வேட்பாளராகக் கருதப்படுகிறார்.

தேர்தலில் யார் வென்றாலும் அவருடன் இணைந்து செயற்படத் தயார் என்று ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

செச்னியாவில் சண்டை முடிந்துவிட்டது; அங்கு இயல்பு வாழ்க்கை திரும்புகின்றது என்று காட்டுவதற்கே தேர்தலை ரஷ்யா நடத்துகின்றது என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

யாழ். வண்ணை அன்னசத்திர முதலாம் ஒழுங்கை.
திருவருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

தமிழ்நாடு - தஞ்சைப் பெரிய கோயில் ஆலய உருவில்
நிர்மாணிக்கப்பட்டதும், காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளால்
அருளாசி அருளப்பட்டதுமான
கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை
(3ஆம் ஒழுங்கை வழி, முதலாம் ஒழுங்கை)
திருவருள்மிகு செல்வவிநாயகர் திருக்கோவிலில் கும்பாபிஷேகம்
நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

எண்ணெய்க்காப்பு: 07.09.2003 ஞாயிறு
பகல் 12 மணி தொடக்கம் 3 மணிவரை (பழைய நேரம்)
மஹா கும்பாபிஷேகம் 08.09.2003 திங்கட்கிழமை
காலை 6.04 மணி தொடக்கம் நிகழவிருக்கிறது.
அடியார்கள் பங்குகொண்டு விநாயகப்பெருமானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பிரதிஷ்டா பிரதம குரு: ஸ்ரீ வத்ஸ வ.இராஜேஸ்வரக் குருக்கள் அவர்கள்
ஆலய பிரதம குரு: பிரம்மஸ்ரீ ம.முருகானந்த சர்மா அவர்கள்

\- ஆலயத்தினர்.

(22260) (24-13-16)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## கல்வியியல் முதுமாணிக் கற்கை நெறி - 2004

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 03.10.2003
எழுத்துத் தேர்வு: 25.10.2003

1. அனுமதிக்குரிய தகைமைகள்
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்.
   - ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டு கற்பித்தல் அனுபவம்.

   அல்லது

   மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டு அனுபவம்.
2. கற்கைநெறிக்காலம் ஓராண்டு

   மாலை வேளைகளிலும் வார இறுதி நாள்களிலும் விரிவுரைகள் இடம்பெறும்.
3. தெரிவு முறைமை

   ஓர் எழுத்துத் தேர்வையும் நேர்முகத் தேர்வையும் உள்ளடக்கியது. இவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்.
   எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையைப் பரீட்சிப்பதாக அமையும்.

மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிப்பிரிவு காசாளரிடம் ரூபா நூறு (100/-) செலுத்தி, பற்றுச்சீட்டினை, உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது ரூபா 100/- இற்குரிய காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையை பல்கலைக்கழக நிதியாளருடைய பெயருக்கு எழுதி சுயமுகவரியிடப்பட்ட ரூபா 4.50 தபால் தலை ஒட்டிய 23X10 சென்ரிமீற்றருடைய தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
கற்கைநெறிக்குரிய கட்டண விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
05. 09. 2003

(C/30005) (25-13-16-24)

## நிரந்தர மருத்துவர் நியமனம்

கைதடி,செப்.6

கைதடி அரச மத்திய மருந்தகத்திற்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் வைத்தியர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். டாக்டர் அருள்நேசன் என்பவரே இவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்பட்ட வைத்தியர் ஆவார்.

தற்போது வாரவிடுமுறை, போயா தவிர்ந்த ஏனைய நாள்களில காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை இந்த மருந்தகம் செயற்படுகிறது. இதேவேளை இங்கு மருந்துக் கலவையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என நோயாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-75)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்கு 24,193 மாணவர்

யாழ்ப்பாணம், செப்.6

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 24 ஆயிரத்து 193 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யாழ். மாவட்ட பாடசாலைகளில் இருந்து 15 ஆயிரத்து 390 மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 8 ஆயிரத்து 803 பேரும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (ஒ-ரி)

### அவசர கலந்துரையாடல்

3ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான (பொது/ சிறப்புக் கலை) சுற்றுலா தொடர்பான கலந்துரையாடல் இன்று (06.09.2003) சனிக்கிழமை 11 மணியளவில் மாணவர் பொது அறையில் நடைபெற இருப்பதால் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

\- சுற்றுலா ஏற்பாட்டாளர்கள்.

(22228) (24-13-16)

### தேவை

அச்சகங்களுக்கு வேண்டிய சகலவிதமான கணனிவேலைகளையும் திறமையாகச் செய்யக்கூடிய, நல்ல அனுபவமுள்ள ஒருவர் உடனே தேவை. நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே வேலை. வேலை நேரங்களை வசதிபோல நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தகுதியுள்ள இருபாலாரும் உடனே தொடர்புகொள்க.

ஆனந்தா அச்சகம்
தொ.பே.: 222 2820
226, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

(24-13-16) (C/30010)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



A/L 2003 வர்த்தகப் பிரிவு மாணவியான
பருத்தித்துறையைச் சேர்ந்த
**செல்வி இளவரசி இராஜலிங்கம்**
அவர்கள் 2A, B பெற்று சித்தியடைந்துள்ளதுடன், யாழ். மாவட்ட மட்டத்தில் 15ஆவது நிலையையும் எய்தியுள்ளார். இவரை நாம் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் கல்வியில் பல சிறப்புகளை அடைய வாழ்த்துகின்றோம்.

பருத்தித்துறை.

நண்பிகள்:
தனுஷா, சிவானந்தி.

(சி-30013) (24-13-16)

## JAFFNA COLLEGE
### ADMISSION - 2004

**Applications for Admission are invited to Grade 1 and Grade 6 (Only limited vacancies)**

- Students who seek admission to Grade 1 should have been born between 1998 February 1st and 1999 January 31st.
- Students who seek admission to Grade 6 should have been born between 1993 February 1st and 1994 January 31st.
- Only few vacancies are available for Grade 6 and Grade 7 English Medium classes.
- Students will be selected on the performances at the interview or a written test held on 15th November 2003
- Application forms will be available from 15.09.2003 to 15.10.2003 at Jaffna College Office during working hours on payment of Rs. 100/-
- Few boarding scholarships for other classes are available to students with excellent academic performances.
- Applications will not be accepted after the 31st of October 2003.

**- Principal.**

(C/30015) (24-13-16)

## துயர் பகிர்கின்றோம்

நீண்ட காலமாக எமது பாடசாலையின் விளையாட்டுத்துறை
செயற்பாடுகளுக்கு உதவிவருபவரான
**திரு.எஸ்.பூபால சிங்கம்** அவர்களின்
அன்புத் துணைவியார்
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது குடும்பத்தினரின் துயரையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(22277) (24-13-16)

## நாற்சதுர சுவிசேஷ சபையின் பொது ஆராதனை

யாழ். மாவட்ட அனைத்து நாற்சதுர சுவிசேஷ சபையின் விசுவாசிகளுக்கும் நாளை (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை பொது ஆராதனை நல்லூர், முத்திரைச்சந்தி சபையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

செய்தியளிப்பவர்: **வண. கலாநிதி லெஸ்லி கீகல்** அவர்கள்

அனைத்து விசுவாசிகளையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

\- நிர்வாகம்.

(22272) (24-13-16)

## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான மனைப்பொருளியலும், கைத்திறனும் பயிற்சிகள்

3 மாத கால
கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் FABRIC PAINTING பயிற்சிகள்
6 மாத கால
உடை தயாரித்தல், பூவேலை, கைவேலை பயிற்சிகள்
- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

**சனி, ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம்: 07.09.2003 (நாளை)**
**கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 10.09.2003**

மேற்படி பயிற்சிகள் நடைபெறும் காலப்பகுதியில் கொழும்பிலிருந்து வருகை தரும் பிரபல அழகுக் கலை நிபுணரால் பின்வரும் வகுப்புகள் குறைந்த கட்டணத்தில் 3 நாள்களுக்கு நடத்தப்படும்.

- Eyebrow Threading & Eyebrow Plucking
- Two types of Bleach
- FACIAL:- Herbal, Gold, Pearl, Fruit, Aroma
- Waxing - Perming - Hair Colouring

இத்துடன் முக அழகு சிகிச்சை பற்றிய குறிப்புகளும் வழங்கப்படும்.

மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பிற்பகல் 2.00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

\- இயக்குநர்.

(சி-30014) (24-13-16)

## மரண அறிவித்தல்கள்

### கிங்ஸ்லி ஜேம்ஸ் (இந்திரன்)

யாழ்ப்பாணம், கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிங்ஸ்லி ஜேம்ஸ் (இந்திரன்) 03.09.2003 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேம்ஸ் தம்பதியினரின் மகனும் தனசிங்கம் தம்பதியினரின் மருமகனும் ராஜியின் அன்புக் கணவரும் குளோற்றி, லிலானி, ஜொனத்தன் ஆகியோரின் அருமைத் தந்தையும் வசந்தி, சந்திரன், லலி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜன், இராஜுவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

859/24, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 5643

தகவல்:
ஜி.ஜே.தனசிங்கம்
(மாமனார்).

(22262) (25-24-13-16)

### பண்டிதர்
### சின்னக்குட்டியர் முருகேசு சண்முகராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஏழாலை வடக்கு, கட்டுவன் தெற்கு ஆகிய ஊர்களைச் சார்ந்தவரும் மல்லாகம் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் கற்பித்து ஓய்வுபெற்றவருமான பண்டிதர் சின்னக்குட்டியர் முருகேசு சண்முகராசா அவர்கள் 02.09.2003 செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2003) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கட்டுவன், மல்லாகம் நெடுஞ்சாலையில் அமைந்திருக்கும் அவரது 'முருகேசம்பதி' இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மேற்கிலுள்ள சப்பட்டியான் ஆலங்கட்டை சைவ உருத்திர பூமிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"முருகேசம்பதி"
கட்டுவன் தெற்கு.
தெல்லிப்பழை.

தகவல்:
ச.விநோதச்சந்திரன்
(மகன்).

(22273) (24-13-16)

உதயன்

## குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டும் வேலை!

வடக்கு- கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக அடுத்து வாரம் கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கை விவகாரம் தொடர்பான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இந்த மாநாட்டைக் கூட்டுகின்றார். மாநாட்டில் கலந்துகொள்ளும்படி விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவார்களா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது, இலங்கையின் -குறிப்பாக வடக்குக் கிழக்கின் - அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதியை இங்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து ஆராயவே இந்தக் கொழும்பு மாநாடு கூட்டப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன, வழங்கப்பட்ட நிதி யார் மூலம் பயன்படுத்தப்படப் போகின்றது, இனி மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பன குறித்தெல்லாம் இந்த மாநாட்டில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடககு-கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள், தனியார் நிதி நிறுவனங்கள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் என பலதரப்பு முக்கியஸ்தர்கள் மட்டுமல்லாமல், டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் பங்குபற்றிய நாடுகளின் பிரதிநிதிகள், பல்தேசிய நிறுவனங்களின் அங்கத்தவர்கள் போன்றோரும் கூட இந்த மாநாட்டில் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக, மொத்தத்தில் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தப்படும் முக்கியத்துவம் மிக்க மாநாடாக இது கருதப்படுகின்றது. அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் இந்த மாநாட்டை அப்படித்தான் வர்ணித்திருக்கின்றார்.

ஆனால், முக்கியத்துவம் நிறைந்த டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகள் பங்குபற்றாமல் எதற்காகப் பகிஷ்கரித்தார்களோ அதற்கான காரணிகளில் எந்த மாற்றமும் இல்லை, சுமார் மூன்று மாதங்களாகியும் கூட.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியை வடக்கு - கிழக்கு மக்களுக்கு சரியாகப் பகிர்ந்து பயன்படுத்துவதற்கு முறையான கட்டமைப்பு ஒன்று இல்லை என்பதும் சமாதானப் பேச்சுகளின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை இணக்கத்தின் அடிப்படையிலான தனது கடப்பாடுகளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதும் புலிகள் தரப்பினால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபங்களில் முக்கியமானவை.

சமாதானப் பேச்சுகளை இடைநிறுத்தவும், டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரிக்கவும் புலிகள் எடுத்த முடிவுக்கு இந்த விடயங்களே அடிப்படை.

டோக்கியோ மாநாடு முடிவுற்று 85 நாளகள் கடந்து விட்டன. ஆனால், புலிகள் அதிருப்தி தெரிவித்த இந்த விடயங்களில நிலைமையைச் சரிசெய்வதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை; இந்த விடயங்களின் நிலைமையை சீர்ப்படுத்தும் முன்னேற்றங்களோ, இணக்கமோ காணப்பட்டதாகவும் இல்லை.

இந்நிலையில், கொழும்பு மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவர் என்று எதிர்பார்ப்பது பொருத்தமாக இருக்காது.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதியை, அந்தப் பிரதேச மக்களின் ஏகப்பிரதிநிதிகளான புலிகளின் அதிக பங்களிப்போடு பயன்படுத்துவதற்கான இணக்கமான பொறிமுறை ஒன்று கண்டறியப்பட வேண்டும். அவசரமாகவும் அவசியமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய முதல் நடவடிக்கை அதுதான்.

அதன் பின்னர்தான் அந்த நிதியைச் செலவிடுவதற்கான வழி முறைகள், உபாயங்கள் குறித்து ஆராய்வதற்கான உயர் மாநாடுகளும் கூட்டங்களும் கூட்டப்பட வேண்டும்.

அதைவிடுத்து, களத்தில் சரியான கட்டமைப்பை ஏறபடுத்தாமல் இத்தகைய மாநாடுகளுக்கு அழைப்பு விடுப்பது குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டும் வேலையாகவே இருக்கும்.

குதிரைக்குப் பின்னால் வண்டியைப் பூட்டினால்தான் வண்டியைக் குதிரை இழுக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளாதது போல, கொழும்பிலும் டோக்கியோவிலும் கூட்டங்களைக் கூட்டுவதில் அர்த்தமில்லை.

### லண்டனில் கடந்தவாரம் இடம்பெற்ற

# அரியாலை இளைஞன் கொலைக்கு 'சாமுராய்' குழு ஒன்றே காரணம்

## ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸார் தெரிவிப்பு



லண்டன்,செப்.6

லண்டனில் கடந்த வாரம் அரியாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் குத்திக் கொலை செய்தவர்கள் 'சாமுராய்' என்ற பெயரில் இயங்கிவரும் இலங்கைத் தமிழர்களைக் கொண்ட குழுவைச் சேர்ந்தவர்கள் என்று லண்டன் பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் குழு, வாள்கள், கோடரிகள் சகிதம் அலைவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த வாரம் கொல்லப்பட்ட அசன் இரத்தினசேகரம் (வயது18) என்ற இளைஞரும் வாளினால் குத்தியே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாகவே இவர் லண்டனில் உறவினர்களுடன் தங்கியிருந்துள்ளார். அவருக்கு குற்றச் செயல்கள் எதிலும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை என்று பொலீஸார் கூறுகின்றனர்.

ஏற்கனவே லண்டனில் இடம்பெற்ற இலங்கைத் தமிழர்கள் கொலைக்கும் இந்தக் கொலைக்கும் இடையில் தொடர்புகளைக் காணமுடியவில்லை என்று அன்டி ரெலில் என்ற புலனாய்வுப் பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து லண்டனில் தமிழ் சமூகத்தினரிடையே சமீபகாலமாக இடம்பெற்றுவரும் கொலைகள் மற்றும் மோதல்கள் தொடர்பாக ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸாரின் கவனம் திரும்பியுள்ளது.

சமீபத்தில் லண்டனில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் 'சாமுராய்' என்ற பெயரில் இயங்கும் குழுவாலேயே கொல்லப்பட்டதாக என்று அவர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜூன் மாதத்திலும் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவர் லண்டனில் கொல்லப்பட்டமைக்கும் இந்தக் குழுவே காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

லண்டனில் ஏற்கனவே குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சில குழுக்கள் இயங்கி வருகின்றன. இவை குறித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள், இந்தக் குழுக்கள் இடையிலான பிரச்சினைகளுக்கு ஏற்கனவே தமிழ்க் கிராமங்களில் உள்ள குடும்ப அல்லது சமூக அமைப்புகளிடையே காணப்பட்ட பிரச்சினைகளே மூலவேராக இருக்கின்றன என்று தெரிவிக்கின்றனர்.

எனினும், இந்தக் குழுக்களில் இருந்து 'சாமுராய்' குழு சற்று வேறுபட்டதாகவும் கொடூரமானதாகவும் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

'சாமுராய்' என்ற பெயரில் அண்மையில் தென்னிந்திய சினிமா திரைப்படம் ஒன்று வெளியாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(ம)

### யுத்தம் காரணமாக உயிரிழந்த, வலுவிழந்தோருக்கான

# இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் இல்லை 2 ஆயிரம் குடும்பங்கள் பெரும் பாதிப்பு

## யாழ். செயலகத்துக்கு தினமும் நடையாய் நடக்கும் அவலம்

யாழ்ப்பாணம்,செப்.6

யுத்தம் காரணமாக கடந்த காலங்களில் குடாநாட்டில் உயிரிழந்த மற்றும் ஊனமடைந்தவர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் கடந்த சில வருடங்களாகத் தடைப்பட்டுள்ளன. இதனால், பாதிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு பல வருடங்களாக இந்த இழப்பீடு வழங்கப்படவில்லை.

போதிய நிதி தமக்குக் கிடைக்காமையே இந்நிலைக்குக் காரணம் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும்பாதிப்புற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன.

இதன்படி, போரால் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் அங்கவீனமடைந்தோருக்கு அவர்களது பாதிப்புககு ஏற்ப 25ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையிலும் வழங்கப்பட்டு வந்தன.

இந்த இழப்பீடு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் பேருதவியாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் போரால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த இழப்பீட்டினை பெற விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன.

அவற்றில் 2 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அதற்கான நிதி இன்னும் தமக்கு கிடைக்கவில்லை என்று யாழ். செயலக வட்டாரம் கூறுகின்றது.

இழப்பீட்டுப் பணத்தைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்கள் தினமும் செயலகத்திற்கு நடையாய் நடக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு அந்த இழப்பீட்டுப் பணம் மட்டும் கிடைத்தபாடாயில்லை.

இதேவேளை -

அரச ஊழியர்களின் சொத்து இழப்புக்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு நிதியும் யாழ். செயலகத்துக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் ஆயிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கொடுப்பனவு செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. (ம-3)

# தொழில் நிறுவனங்களுக்கு சூழல் பாதுகாப்புப் பத்திரம்

## மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகரசபை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி ந. சூரியராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாநகரசபைப் பகுதியில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களால் வெளியேற்றப்படும் கழிவுகள் சுற்றுச் சூழலைப் பாதிப்படையச் செய்கின்றன. இதனைத் தடுக்கும் முகமாகவே இந்த அனுமதி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

கழிவுப்பொருள்களை அனுமதிக்கப்படாத இடங்களில் குவிப்பது சுவர்கள் அல்லது கட்டடங்களில் அனுமதிபெறாது துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுவது, விளம்பரப்பலகைகள் நிறுத்துவது, சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் பொருள்களைக் களஞ்சியப்படுத்துவது ஆகிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவே இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையால், யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பேக்கரிகள், வாகனச் சுத்திகரிப்பு நிலையங்கள் உட்பட 45 தொழில் நிறுவனங்களுக்கு சூழல் பாதுகாப்பு அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார் அவர். (ஒ-5)

**நாளை**

ஆவணி 21
ஞாயிற்றுக்கிழமை
(07.09.2003)
திதி : துவாதசி
நள்ளிரவு 12.07 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
பிற்பகல் 4.21 வரை
சுபநேரம்: 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வாழ்க்கை என்பது போராட்டம் அதில் வாழ்வதும் வீழ்வதும் உன்கையில் தான்.

### பணிகளை மேம்படுத்த

# யாழ். தொழில் திணைக்களத்துக்கு மூன்று உத்தியோகத்தர் நியமனம்

யாழ்ப்பாணத்தில் தொழில் திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்ள மூன்று தொழில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். உதவித் தொழில் ஆணையாளர் எஸ்.முத்துக்குமாரசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பாக வெளியில் சென்று ஆராய்வதற்கு தற்போது ஓர் உத்தியோகத்தர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார். ஆனால், அண்மைக்காலமாக தொழில்விருத்தி மற்றும் அதன செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதனால், தொழில் திணைக்களப்பணிகளை ஒரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதனால், கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற உதவித் தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சமயம் இது தொடர்பாக தொழில் அமைச்சிடம் கலந்துரையாடினேன்.

அதன் பயனாக ஏனைய மாவட்டங்களில் இருந்து மூன்று தொழில் உத்தியோகத்தர்களை யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற தொழில் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. அத்துடன் இந்த உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதன் மூலம் ஓரளவேனும் யாழ்ப்பாணத்தின் தொழில் விருத்தியினை அவதானிக்கமுடியும் - என்று அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# போலியோ சொட்டு மருந்து 10 வயதுக்குட்பட்டோருக்கு

## இம்முறை வழங்கப்படும்

கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த போலியோ சொட்டு மருந்து இம்முறை பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி இந்தப் போலியோ சொட்டு மருந்து வடக்கு - கிழக்கில் வழங்கப்படவுள்ளது. அத்துடன் அடுத்த மாதம் 18 ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு வைத்திய அதிகாரி பிரிவிலும் அமைக்கப்படவுள்ள சொட்டு மருந்து வழங்கும் நிலையங்கள் மற்றும் அதுகுறித்த விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளன என்றார் அவர். (ஒ-10-6)

# கைதடி, இணுங்கித் தோட்டம்
# அருள்மிகு கந்தசுவாமி ஆலய
# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பிதழ் 07.09.2003

## கலைப்பீடாதிபதியின் ஆசியுரை

யாழ்ப்பாணத்திலுள்ள கைதடி, இணுங்கித்தோட்டப் புனித தலத்தில் எழுந்தருளி அருள்சுரக்கும் முருகப்பெருமானுக்கு அடியார்களின் பக்தியின் சின்னமாகவும் அன்புக் காணிக்கையாகவும் எழில்மிகு சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு அர்ப்பணிக்கப்படுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயத்தில் நிகழும் நைமித்தியக் கிரியைகளுள் வருடந்தோறும் நிகழும் மஹோற்சவம் உன்னதமான பலன்களைத் தரவல்லது. அம்மஹோற்சவத்தின்போது நிகழும் தேர்த்திருவிழா பிரமோற்சவம் எனச் சிறப்பிக்கப்படுவது அடியார்கள் அனைவரும் ஒன்றிணைந்து 'ஊர்கூடி தேர் இழுத்தல்' என்ற மரபுக்கு இலக்கணமாக விளங்கி இறையருளைப் பெற இத்திருவிழா சிறந்த வாய்ப்பினை நல்குகிறது. ஆணவமலத்தில் அமிழ்ந்துவிடாது ஆன்மாக்களைக் காப்பாற்றி உய்வுபெறச் செய்யும் வகையில், ஆணவத்தை அழிக்கும் நோக்கில் இறைவன் தேரேறி உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இக்காட்சியைக் காணும் பேறு கைதடி வாழ் அடியார்களுக்குக் கிட்டியுள்ளது. இத்தகைய சிறப்புப் பெற்ற திருவிழாவுக்கேற்ற தேரினை நிர்மாணிக்கும் பணி ஆலயந்தோறும் இடம்பெற்று வருகின்றது. அப்புனிதப் பணியில் கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானமும் இணைந்துள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

சித்திரத்தேர் வடிவமைக்கும் தீர்மானம் இத்தேவஸ்தான பரிபாலனசபையினால் 2000ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டு இடப்பெயர்வின் காரணமாகத் தடைப்பட்டு 2001ஆம் ஆண்டு பிற்பகுதியில் மக்கள் யாவரும் மீளக்குடியமர்ந்தபோது 2002ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இப்பணி மீண்டும் தொடங்கப் பெற்று நிறைவுபெற்று நாளை 07-09-2003 வெள்ளோட்டம் நடைபெறுவது அடியார்கள் செய்த தவப்பயனேயன்றி வேறில்லை. இத்தலப்பணியை சிறப்பாக நிறைவேற்றியுள்ள திருநெல்வேலி சீவரட்ணம் சிற்பாலயத்தைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக. ஆலயந்தோறும் இடம்பெற்றுவரும் இத்தகைய சித்திரத்தேர் நிர்மாணப் பணிகளால் சிற்பக்கலை மரபு பேணப்பட சிறந்த வாய்ப்பேற்படுகின்றது.

சித்திரத்தேர் வெள்ளோட்டம் வெற்றி பெறவும் சிறப்புப் பெறவும் எமது நல்வாழ்த்துகள் உரித்தாகுக. இப்புனிதப் பணியில் தம்மை இணைத்துக்கொண்ட ஆலய பரிபாலனசபையினர்க்கும் இப்பணிக்கு உதவிய அடியார்களுக்கும் சிற்பக்கலைஞர்களுக்கும் வழிகாட்டிய சிவாச்சாரியருக்கும் எல்லாம்வல்ல முருகப்பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். முருகப்பெருமான் சித்திரத் தேரில் எழுந்தருளி ஆலய வீதிகளில் பவனிவந்து அருள்சுரக்கும் தெய்வீகப் பேற்றினால் எங்கும் இன்பமும் சாந்தியும் சமாதானமும் சிறப்பதாகுக.

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.

## ஆலய பரிபாலனசபையினரின் ஆசிச்செய்தி

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித் தனன் உலகுய்ய

கந்தபுராணத்தில் கச்சியப்ப சுவாமிகள் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய் விளங்குகின்ற பெருமானே முருகொளியாகத் தோன்றினான் என்று முருகனின் தோற்றத்தைக் கூறியுள்ளார்.

தேவர்களின் இடர்களைக் களைவதற்கு ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளால் தோற்றுவிக்கப்பட்ட சண்முகப் பெருமான் கைதடி, இணுங்கித் தோட்டம் என்னும் புண்ணிய பூமியில் கோவில் கொண்டு, அடியவர்களின் துயரங்களை போக்கிய வண்ணம் இருக்கும் பெருமானுக்கு ஒரு சித்திரத் தேர் இல்லாமை அடியவர்களுக்கு ஒரு பெரும் குறையாக இருந்தது.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக பரிபாலனசபையாரால் 1996 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆரம்பிப்பதற்கு சில ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் சூழல் அதற்கு எதிர்மாறாக இருந்த காரணத்தால் அப்பணி தொடங்க முடியவில்லை. 2002 ஆம் ஆண்டு ஆனி உத்திரத்தில் இவ்வேலையை ஆரம்பித்து எம்பெருமான் அடியவர்களின் சிறு துளி பெருவெள்ளம் என்னும் வாக்கிற்கு அமைவாக இப்பணியை 2003ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இறையருளின் மகத்துவத்தால் இனிது நிறைவேறியது.

கலைஞனின் கைவினைத்திறன் தேர்ச் சிற்பத்தில் மிளிர்வது பாராட்டப்படுவதுடன், இப்பணியை தனது பணியாக ஏற்று உரிய நேரத்தில் முடித்துத்தந்த சிற்ப கலைஞன் கலாபூஷணம் ஜீவரத்தினத்தின் புதல்வன் சிற்பகலைஞானி ஜெயப்பிரகாஸ் அவர்களுக்கும், இதற்கான மரம் மற்றும் பண உதவி புரிந்து இப்பணியை இனிது நிறைவேற உதவிய அடியவர்களுக்கும் இறையருள் என்றும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

மேலும் எம்பெருமானுக்கு நிறைவேற்ற வேண்டிய ஏனைய பணிகளையும் தொடர்ந்து நிறைவேற்ற உதவி, இறைபணி நம்பணி என வாழ்வோமாக.

அவன் அருளாலே அவன்தாள் வணங்கி.

- ஆலய பரிபாலனசபையினர்,
கைதடி, இணுங்கித்தோட்ட கந்தசுவாமி தேவஸ்தானம்.


## பரமேஸ்வரனே ரதபதி

யசூர் வேதத்தில் பல இடங்களில் ரதத்தைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. "ரதபதிப்யச்சவொநம:" ரதத்தின் தலைவராக விளங்குகின்ற பரம்பொருளே உமக்கு வணக்கம் என்பது இதன் பொருள்.

இன்னொரு இடத்தில் இறைவனே தேரை ஆக்குபவர் என்று குறிப்பிடப்படுகிறார். "ரதகாரேப்யச்சவோநம:" ரதத்தை நிர்மாணிப்பவரே உமக்கு வணக்கம் என்பது அதன் பொருள். இத் துணை வேதப்பொருளோடு பெருமைவாய்ந்த தேர் உற்சவம் உயர்ந்த உற்சவமாகும்.

கைதடி, இணுங்கித் தோட்டம் ஸ்ரீவல்லீதேவ சேனா சமேத முருகப்பெருமான் அடியார்களின் பெருமுயற்சியால் தனக்கென்று உன்னதமான தேரை நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றார். அத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற நடைபெற ஆசீர்வதிக்கிறேன்.

தா. மகாதேவக் குருக்கள்.
இணுவில் குருகுலம்.



## ஆசியுரை

கைதடி, இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்திற்கு, எமது ஆறுமுகம் சிற்பாலயத்தினாலே சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டு நாளை 07-09-03 வெள்ளோட்டம் நிகழத் திருவருள்பாலித்துள்ளது. எமது ஆறுமுகம் சிற்பாலயம் ஈழத்தின் பல பாகங்களிலும் மலேஷியா, சிங்கப்பூர் முதலான கடல் கடந்த நாடுகளிலும் சிறப்பான சித்திரதேர்களை அமைத்து ஈழத்துச் சிற்பக் கலையில் தனித்துவத்தைப் பேணிவந்துள்ளது.

எமது சிற்பாலயம் நூற்றி இருபத்தைந்து தேர்களுக்கு மேல் வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்று தலைமுறையாகச் சித்திரத்தேர் வடிவமைப்பிலே ஈடுபட்டுவரும் எமது சிற்பாலயத்தின் தெய்வீகப்பணி இன்றும் இனிதே தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

எமது அருமைத் தந்தையார் தேர்க்கலை அரசு, சிற்பச் சக்கரவர்த்தி, கலாபூஷணம் ஆ.ஜீவரத்தினம் அவர்களின் ஆசியுடனும் அரவணைப்புடனும் வழிகாட்டலுடனும் அடியேன் இச் சித்திரத்தேர் வடிவமைப்பிலே ஈடுபட்டு வருகின்றேன். எமது தந்தையாரின் சகோதரர்கள் பேருதவியாக இருந்து செயற்படுவது மேலும் இத்துறையிலே பல சாதனைகளைப் படைக்க உதவும் என நம்புகின்றேன்.

சிற்ப சாஸ்திரவிதிகளுக்கு அமையும் அதே வேளையிலே தனித்துவமானதோர் அழகியல் அம்சத்தையும் எமது சிற்பாலயத் தேர்கள் கொண்டு விளங்குவதை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும்.

இறைவனின் திருவருளாலும் எமது தந்தையார் அமரர் ஆ. ஜீவரத்தினம் அவர்களின் ஆசியினாலும் சித்திரத்தேர் வடிவமைப்பிலே தனித்துவமான, சிறப்பான தேர் இடத்தைப் பெற முருகப் பெருமான் திருவருள் பாலிப்பார் என நம்புகின்றேன்.

திருவருளும் குருவருளும் முன்நிற்க.

சிற்பக் கலைமாமணி ஆ.ஜீ.ஜெயப்பிரகாஸ்
ஆறுமுகம் சிற்பாலயம்.

## ஆலயப் பிரதம குருவின் ஆசியுரை

கைதடி, இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி கோவில் ஸ்ரீ ஷண்முகப்பெருமானுக்கு அழகிய புதிய சித்திரத்தேர் எங்கள் ஷண்முகப்பெருமானின் பெருங் கருணையால் அமையப்பெற்று அதன் வெள்ளோட்டவிழா நாளை 07-09-2003இல் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இந்த ஆலயத்தின் மஹோற்சவ குருவாக யான் உள்ளபோதே இப்புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெறுவதையும் அடியார்கள் முருகனின் அருள்பெற்று உய்ய ஸ்ரீ ஷண்முகப்பெருமானின் அருள் வேண்டுகின்றேன். அவன் தாள் பணிந்து கைதடி வாழ் மக்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துவதுடன் எனது நல்லாசியையும் கூறி வாழ்த்துகிறேன்.

சிவஸ்ரீ யோ. குருசாமிக்குருக்கள்
ஆலய பிரதமகுரு.

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண குடாநாட்டிலே சைவமும் தமிழும் செழிப்புற்று வளர்ந்திருக்கும் பதிகளிலே கைதடிக் கிராமமும் ஒன்றாகும். பல சைவ சான்றோர்கள் இக்கிராமத்திலே வாழ்ந்து சிவநெறி தளைக்க அரும்பாடுபட்டார்கள். கைதடிக் கிராமத்திலே பிள்ளையார் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள், அம்பாள் ஆலயங்கள் என பல ஆலயங்கள் இருந்து அடியார்களுக்கு திருவருளை வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றன.

கைதடியிலே இணுங்கித்தோட்டப் பதியிலே இருந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கின்ற அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு இந்துக்களாகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த ஆலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. சிவாச்சாரியார்கள் பக்திபூர்வமான கிரியைகளை செய்து மக்களின் ஆத்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டி வருகின்றார்கள். இவ்வாலயம் மேன்மேலும் வளர்ச்சிபெற்று அடியார்களுக்கு திருவருளை வழங்கும் ஆலயமாக மிளிர எல்லாம்வல்ல தமிழ்த் தெய்வமாகிய கந்தக் கடவுளின் திருவருளை பிரார்த்திக்கின்றேன்.

தி. மகேஸ்வரன்,
இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர்.

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

கைதடி, இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்திற்கென வடிமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை 07-09-2003 நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தென்மராட்சியில் 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய இழப்பு, இடம்பெயர்வுக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்து இப்பெரிய கைங்கரியத்தை கைதடி வாழ் மக்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

தென்மராட்சியிலேயே மீளக்குடியமர்ந்த கையோடு சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும் முதலாவது ஆலயம் இதுவாகும். இப்பணியை நிறைவேற்ற ஒத்துழைத்த கைதடி வாழ் மக்கள், ஆலய பரிபாலனசபையினர் மற்றும் திருநெல்வேலி சீவரத்தினம் சிற்பாலயத்தைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் திரு.ஜீ. ஜெயப்பிரகாஸ் ஆகியோருக்கு எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

செ.ஸ்ரீநிவாசன்
பிரதேச செயலர், பிரதேச செயலகம்,தென்மராட்சி, சாவகச்சேரி.

## முருகன் அருள் கிடைக்கட்டும்!

தட்சிண கைலாயம் என்று பலராலும் போற்றப்படும் யாழ்ப்பாணப் பெரும் பகுதியிலே கைதடிக் கிராமத்திலே கலியுகத் தெய்வத்தை இணுங்கித் தோட்டத்திலே பார்க்கும் சந்தர்ப்பம் சென்ற வருடம் இதே தினத்தில் கிடைத்தது.

அங்கே கூடியிருந்த நிர்வாகசபையார் ஒரு வருடத்திலே தேர் அமைக்க வேண்டும், தேர்முட்டி கட்ட வேண்டும் என்ற ஒரே எண்ணம், ஒரே நோக்கம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. கைதடி மக்கள் இடம் பெயர்ந்து இவ்வருடம் தான் வீடு வாசலைத் திருத்தி அடுத்தவருடம் தான் தேர்த்திருப்பணி முடியும் என்று நான் மனதில் நினைத்ததுண்டு.

ஆனால் அவர்கள் சொன்னதை நிறைவேற்றிவிட்டார்கள். இதற்கெல்லாம் ஊக்கமாக முன்னின்று உழைத்த திரு. நா. திருச்செந்தில்நாதன் அவர்களின் பிடிவாதப் போக்கே காரணம் என்று நான் நினைக்கின்றேன். இவர்களின் விரைவான திருப்பணிக்கெல்லாம் விரைவாக ஈடுகொடுத்தும் அழகாக தேர் அமைத்த சிற்பி ஜெயப்பிரகாசத்துக்கும் முருகன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இன்றைய வெள்ளோட்ட விழாவில் கைதடி மக்கள் சிறப்பாக வாழவும் கூடிய விரைவில் கைதடியில் முதல் முதல் ராஜகோபுரம் அமையும் தலமாக அமையவும் வேண்டி,

இந்திருப்பணியில் சம்பந்தப்பட்ட சகலருக்கும் எம் பெருமானின் திருவருள் கிடைக்க எம்பெருமானை வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

-தியாக.கெங்காதரகுருக்கள்
புன்னாலைக்கட்டுவன்.

## சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற நடைபெற வாழ்த்துவோர்:

01. ஆதவன் மருந்தகம், கைதடிச்சந்தி.
02. திலக்சன் பல்பொருள் வாணிபம், கைதடி தெற்கு.
03. ஆரியபவான், கைதடிச் சந்தி.
04. கஜன் களஞ்சியம், பல்பொருள் வாணிபம், கைதடிச்சந்தி.
05. மாணிக்கம் பல்பொருள் வாணிபம், கைதடிச்சந்தி.
06. கஜன் ஓட்டோ வீடியோ சென்ரர், கைதடிச்சந்தி.
07. நஞ்சன் எரிபொருள் நிலையம், கைதடிச்சந்தி.
08. ஸ்ரீராம் பல்பொருள் அங்காடி, கைதடிச்சந்தி.
09. நியூ லீலாவதி பல்பொருள் வாணிபம், கைதடிச்சந்தி.
10. கதிர்வேலவன் களஞ்சியம், கைதடிச் சந்தி.
11. கே.எஸ்.பொன்னம்பலம் எரிபொருள் நிலையம், கைதடிச்சந்தி.
12. சுகந்தன் மிதிவண்டி திருத்தகம், மானிப்பாய் வீதி, கைதடி.
13. வேல்பதி பல்பொருள் வாணிபம், கைதடி மேற்கு.
14. இராசன் களஞ்சியம், கைதடி மேற்கு.
15. நந்தினி களஞ்சியம், கிறைண்டிங்மில், கைதடி மேற்கு.
16. குமரன் பல்பொருள் வாணிபம், கைதடிச்சந்தி
17. குமரன் கணனிச் சேவைகள், கைதடி மேற்கு.
18. மகிந்தினி களஞ்சியம், மானிப்பாய் வீதி, கோப்பாய்.
19. நீபன் களஞ்சியம், கைதடிதெற்கு, கைதடி.
20. ஸ்ருடியோ கீர்த்தனா, கண்டிவீதி, கைதடிச்சந்தி.
21. ராம் ரேட் சென்ரர், கைதடி தெற்கு.
22. மனோராஸ் தொலைத்தொடர்பு நிலையம், கைதடிதெற்கு.
23. சுமித்திரன் ஸ்ரோர்ஸ், கைதடி மத்தி.
24. காந்தன் களஞ்சியம், கைதடி மத்தி.
25. கனிவாணிபம், கைதடி மேற்கு.
26. குகேந்திரன் வாணிபம், கைதடி மேற்கு.
27. ஸ்ரீகணேசா களஞ்சியம், கைதடிச்சந்தி.
28. கைதடி வர்த்தக நிலையம், கைதடிச்சந்தி.
29. ஓம் முருகன் நகை மாடம், கைதடிச்சந்தி.

* * *

# சீ...தனம்?



செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில், நாம் இப்போது காலடி எடுத்து வைத துள்ளோம். இதே செப்ரெம்பர் மாத ஆரம்பம்தான், ஈழத்தின் சமுதாயக் கொடுமை ஒன்றிற்கு, சாவுமணி அடிக்கின்ற சரித்திரத்தின் ஆரம்பமாகவும், அத்திவாரமாகவும் அமைந்துள்ளது. ஆமாம், செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி 1995ஆம் ஆண்டன்றுதான் முதன் முதலாக மணக்கொடைத் தடைச்சட்டம் என்கின்ற சீதனத் தடைச்சட்டம், தமிழர் தாயகத்தில் அமுலாக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைக்கான போராட்டம், மண் விடுதலைக்கான போராட்டம் மட்டும்தான்! என்று எம்மில் பலர் இன்னமும் எண்ணியும் எழுதியும் வருகின்றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது; தமிழ் மண்ணை மட்டும் மீட்பதற்கான போராட்டம் அன்று! பெண்ணிய அடிமைத்தனம், சாதி ஒடுக்குமுறை, வர்க்க பேதம் போன்ற பல சமூகக் குறைபாடுகளைக் களைவதற்கான போராட்டங்களையும், தமிழ்மொழி மீட்பு, மண் மீட்பு, நெறி மீட்பு போன்றவற்றிற்கான போராட்டங்களையும், ஒருங்கு சேர, விடுதலைப் புலிகள் இயக்கம் நடததிவருவதை நாம் இந்த வேளையில் சுட்டிக்காட்ட விழைகின்றோம்.

ஆனால், ஸ்ரீலங்கா அரசுகளின் தமிழின அழிப்பு யுத்தத்தைத் தம் ஆயுதப் போராட்டம் மூலமாக, விடுதலைப் புலிகள் முகம் கொடுத்துப் போராடியது மட்டும்தான், பிறரின் பார்வையில் ஏன் எம்மவரின் கண்களில் கூடத் தெரிகின்றது. முன்னைய ஸ்ரீலங்கா அரசுகள் தொடுத்த ஆயுதப் போர்களுடன், பொருளாதாரத் தடை, உணவுத் தடை, மருந்துத் தடை போன்ற உடல், உளவியல் ரீதியான போர்களையும் முகம்கொடுத்துப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கம், எம்மிடையே பரவிக் கிடக்கும் சமூக அநீதிகளையும் ஒருங்கு சேர எதிர்த்துப் போராடிவருவதையும் நாம் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றோம்.

ஈழத் தமிழன் மீது, ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதம் திணிக்கப்பட்டதன் காரணம், அவன் யாழ்ப்பாணத் தமிழன் என்பதாலோ, மட்டக்களப்புத் தமிழன் என்பதாலோ - அல்லது அவன் மன்னார் - வன்னித் தமிழன் என்பதாலோ அல்ல! அவன் 'தமிழன்' என்பதால் மட்டுமே! தமிழன் தமிழனாக வாழ்வதாலும், அவன் பேசுவது தமிழ்மொழியாக இருப்பதாலும், அவனுக்கு மதங்களைக் கடந்த தனித்துவமான பண்பாடும் - நாகரிகமும் இருப்பதாலும், அவனுக்கென்று ஒரு பாரம்பரிய பூமி வாழ்விடமாக இருப்பதனாலும், அவனுடைய இனம் ஒரு தேசிய இனமாக இருப்பதனாலும் - அவனை - அந்தத் தமிழனை, அவனது மொழியை அவனது பண்பாட்டை, அவனது நாகரிகத்தை, அவனது பாரம்பரிய மண்ணை, அவனது இனத்தை, - ஒழிப்பதற்கான - அழிப்பதற்காக மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் தங்கள் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டன. இவை அனைத்தையும் எதிர்த்துப் போராடியது மட்டுமல்லாது, தனது இனத்திலேயே கால காலமாகப் புரையோடிப்போயிருக்கும் பல சமூக அநீதிப் புண்களுக்கும் மருத்துவம் செய்ய வேண்டிய தார்மீகக் கடமை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு உண்டு. அதில் ஒன்றுதான், இந்த மணக் கொடைத் தடைச்சட்டம் என்கின்ற சீதனத் தடைச்சட்டம். தன் நாடு மட்டுமல்ல, தனது இனமும், மொழியும், பண்பாடும் கலைகளும் உண்மையான முழுச் சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக மேற்கொண்டுள்ள செயற்பாடுகளில் ஒன்றுதான், இந்தச் சீதனத் தடைச்சட்டம்!

தமிழ்ப் பெண்ணைப் பூச்சூடிப் பொட்டு வைத்து - பொன் நகையால் அலங்கரித்து - பட்டு உடுத்தி, பாட்டெழுதி, மெட்டமைத்து, போற்றிப் பாடிப் புகழ்ந்து வந்தாலும் பெண் அடிமை என்ற பிற்போக்குவாதச் சிந்தனையின் அடிப்படையில்தான், எமது தமிழ்ப் பெண் இனம் வாழ்ந்து(?) வந்திருக்கின்றது. அப்படிப்பட்ட சமுதாயச் சீர்கேட்டுக் கொடுமைகளின் வெளிப்பாடு ஒன்றுதான் 'கட்டாயச் சீதனத்தின்' கொடுமை!

சீதனத்தின் நன்மை-தீமைகளை நாம் ஆராயப்போவதற்கு முதல், இதற்கு அடிப்படையாக விளங்கும் ஆணாதிக்கம் - பெண்ணடிமைத்தனம் - சமூகவியலின் பொருளாதாரம் போன்றவற்றைச் சற்று விளக்கமாகத் தர்க்கிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

பெண்ணியம் குறித்த ஆய்வாளரான 'கேட் மில்லட்' என்ற பெண்மணி, பெண்ணடிமை குறித்துச் சற்று ஆழமான கருத்துகளை விளக்கியுள்ளார். உலகம் முழுவதும் 'பால்வகை' என்பது, ஆண்-பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில்தான் அமைந்துள்ளது. ஏனென்றால், ஆணாதிக்கச் சமூகம் வகுத்ததுதான் இந்தப் 'பால்வகைப்' பிரிவு என்பது. ஆண் தனக்குரிய சமூகக் களமாக 'இராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றை முன்பு தெரிந்தெடுத்துக் கொண்டு, தன்னை முதன்மைப்படுத்திக் கொண்டான்.

பெண்ணுக்கு 'இல்லம்' என்பதை உரிமையாக்கி, அதற்குள் அவளது இயக்கத்தை அவன் கட்டுப்படுத்தினான். அதனால் சமூகத்தில் பெண்ணின் இயக்கம் குறைந்தது. குடும்ப அமைப்பில் அடங்கிக் கிடக்கும் பெண், சமூகத்தை அணுகுவதற்கு, அவளுக்குக் கணவன் என்ற துணை தேவைப்பட்டது. அவள் அவ்வாறு கணவனைச் சார்ந்து நிற்கும்போது, அது அவளைச் சுயசிந்தனை இல்லாதவளாக ஆண்மகனின் கைப்பாவையாக உருவாக்குவதற்குத் துணை போயிற்று. இரண்டு பால் இனங்கள் இடையேயான அதிகார உறவுகள் வளர்ந்து பெருகுவதற்கு, குடும்பம் என்ற அமைப்பும் காரணமாக அமைந்தது.

பாலியல் அடிப்படையிலான பெண் அடிமைத்தனம் கருத்துருவம், உயிரியில், சமூகவியல், வர்க்கம், பொருளாதாரமும்-கல்வியும், சக்தி, மானுடவியல், உளவியல் என்று பல நிலைகளில் பல்கிப் பெருகியுள்ளதாக 'கேட் மில்லட்' மேலும் குறிப்பிடுகின்றார்.

### பெண் அடிமை

மேலைத்தேய ஆய்வு இவ்வாறு இருக்கையில், எமது தமிழ்ச் சமுதாயத்தில் இந்தப் பண்பு குறித்துச் சற்றுப் பார்ப்போம். தமிழ் நூல்களில் மிகப் பழைமைவாய்ந்ததாகக் கருதப்படும் தொல்காப்பியத்தின் நூற்பாக்கள் கூட, பெண்ணடிமைக் கருத்துருவங்களைத்தான் காட்டி நிற்கின்றன. தொல்காப்பியம், ஆரியர் ஊடுருவலையும் காட்டி நிற்பது உண்மைதான் என்றாலும், தொல்காப்பியரின் வரைமுறைகள், ஆணாதிக்கத்தையும்-பெண்ணடிமைத் தனத்தையும் ஏற்றுக் கொண்டிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. மேலைத்தேய பெண்மணியான 'கேட் மில்லட்'டின் மேலைத்தேய ஆய்வுக்குச் சார்பாக, மேலைத்தேய நாகரிக வாழ்விற்கும் முந்தைய கீழைத்தேய நாகரிகமும் சான்று காட்டி நிற்கின்றது. உதாரணமாக, தொல்காப்பியர் ஆண் மகனின் இயல்பைப் பற்றிக் கூறும்போது -

*'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'* (தொல்காப்பியம் - பொருள்-களவு 7) என்று உயர்த்திக் கூறுகின்றார். பெண்ணுக்குரிய இயல்பைப் பற்றிக் கூறும்போது -

*'அச்சமும் நாணமும் மடனும் முந்துறல் நிச்சமும் பெண் பாற்குரிய'* என்று தொல்காப்பியர் கோடு கீறி வரையறுக்கின்றார். இதன் அடிப்படையில் ஆண்மகன் உரமுடையவனாகவும், பெருமைக்குரியவனாகவும் காட்டப்படுகின்றான். பெண்ணோ, அச்சம், மடம், நாணம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக, இரக்கம் உடையவளாக, மெல்லியவளாக, உணர்ச்சியை அடக்கும் ஆற்றல் அற்றவளாக, செயல்திறன் அற்றவளாக உருவாக்கப்படுகின்றாள்.

மேலும், தொல்காப்பியர் இல்லத் தலைவிக்கு உரிய பண்புகளைக் கூறும்பொழுது -

*'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும் மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின் விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்'* (தொல்காப்பியம் - பொருள் - கற்பு.11) என்று வரையறுக்கின்றார். அதாவது, இல்லறத்தில் பெண் ஒரு பதிவிரதையாகவும், நல்ல ஒழுக்கம் உள்ளவளாகவும், பெண்மை, பொறுமை, மனக் கட்டுப்பாடு உடையவளாகவும், விருந்து உபசரித்து சுற்றம் ஓம்புபவளாகவும் இருக்கவேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். அதுமட்டுமல்ல, கணவன் மனக்கட்டுப்பாடு இல்லாமல், பரத்தையர்களிடம் - விலைமாதர்களிடம்- சென்று வரும்போதும், மனைவியானவள், சிரித்த முகத்துடன் கணவனை வரவேற்பவளாகவும் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும் எனவும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆண் மையவாதம்', அன்றைய தொல்காப்பியம் - மற்றும் சங்க கால இலக்கியங்களில் இருந்து, இன்றைய படைப்பிலக்கியம் வரை காணக்கூடியதாக உள்ளது. கோவலனின் பரத்தமையைப் பொறுத்துக் கொண்ட கண்ணகியைப் போற்றுவதை நாம் சிலப்பதிகாரத்தில் கூடக் காண்கின்றோம்.

### யதார்த்த நிலை

'பருவம்' என்றால் என்ன? என்பதை ஒரு புதுக் கவிதை அழகாகச் சொல்கின்றது.

'பருவம் என்றால் ஆணுக்குச் சிறகுகளும் பெண்ணுக்கு விலங்குகளும் உருவாகும் காலம்.'

இன்று இலங்கையிலும், தமிழ் நாட்டிலும், தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வெளிவருகின்ற தமிழ் திருமண விளம்பரங்களை பார்த்திருப்பீர்கள். சாதி - சமயக் குறிப்புகளோடு மணமகள், என்ன நிறத்தில் - என்ன அளவில், எப்படி இருக்க வேண்டும் என்றுதான் விளம்பரங்கள் வெளிவருகின்றன. ஆனால் எந்த ஒரு பெண்ணும் தனக்கு வாழ்க்கைத் துணையாக வரக்கூடியவன், இந்த உயரத்தில், இந்த நிறத்தில், இந்த உருவத்தில் இருப்பவனாக இருக்க வேண்டும் என்று எளிதில் விளம்பரம் செய்ய முடியாத நிலைதான் இன்றைய யதார்த்த நிலை.

ஆரியர்கள் வருகைக்கு முன், தாய்வழிச் சம்பிரதாயமே, பழங்குடி மக்கள் சமுதாயங்களில் நிலவி வந்திருக்கின்றன என்பதற்குத் தகுந்த சான்றுகள் உள்ளன. அன்றைய தாய்வழிச் சம்பிரதாயத்தில், பெண் வீட்டை விட்டுப் போகமாட்டாள். அவள் பிறந்த வீடு, அவளுக்கு உரிமையுள்ள வீடு. அவளை மனைவியாக ஏற்றுக்கொள்பவன், அவளது வீடு தேடி வந்து அங்கேயே வாழ்வான். இந்த வழக்கம் இன்று தமிழ் நாட்டில் இல்லாமல் போய்க்கொண்டிருந்தாலும் ஈழத்தில் மாறாமல் அப்படியே இருப்பதைஅறிவீர்கள்.

திருமணத்தின் போது பெண்களுக்கு சீதனம் வழங்குகின்ற முறையை நாம் ஆராய்ந்து பார்த்தால், அது குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தில் மிகவும் ஆழமாக வேரோடிப் போய் நிறுவனமயப்பட்ட வழக்கமாக இருப்பதை நாம் காணலாம். யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய சொத்துடைமைச் சட்டமாகிய தேச வழமைச் சட்டக் கோவையில், இந்த சீதன முறைமை, ஒரு சமூக ஒழுங்கு முறையாகவே கொள்ளப்படுகின்றது. இந்தச் சொத்துடைமைச் சட்டத்தின்படி, ஒரு பெண் தனது தாய்வழியாகப் பெறுகின்ற சொத்துக்களைப் பேணுவது குறித்த விதிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. தேச வழமைச் சட்டத்திற்கு கிட்டத்தட்ட முந்நூறு ஆண்டு கால வரலாறு உண்டு. ஆனால், தாய்வழிச் சொத்துடைமையின் மூலம், இதற்கும் அப்பாலானது. யாழ்ப்பாணத்து சீதன வழமையின் வரலாற்று வேரும் ஆழமானது. பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பு, தென்மேற்கு இந்தியாவிலிருந்து, யாழ்ப்பாணத்தில் குடியேறிய தமிழர்களிடமிருந்தே இந்த வழக்கு முறை தோன்றியிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. பின்னாளில், காலனித்துவவாதிகள், இந்தச் சொத்துடைமைச் சட்டத்தைத் திருத்திய போதும், பெண்களுக்கு சீதனம் வழங்கும் மரபுமுறை, அடிப்படையில் மாறவில்லை. தமிழ் சமூகத்தில் நிலையூன்றி நீடித்து வருகின்ற சீதன முறைமை, இன்றும் தமிழ் மக்களின் வாழ்வை நிர்ணயித்து வருகின்ற சக்தியாகவே விளங்குகின்றது. இந்தப் பிரச்சினையின் அடிப்படையில்தான், ஒரு தமிழ்ப்பெண்ணுடைய சமூக அந்தஸ்தும், அவளுடைய சமூகப் பொருளாதார வாழ்வும் நிர்ணயமாகினறது. சீதன வழக்கு முறையானது, யாழ்ப்பாண சமூகத்தின், சமூக - பொருளாதார வாழ்விற்கு ஓர் அசசாணியான பிரச்சினை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தின் பாரம்பரிய சொத்துடைமைகளே, பெண்ணுக்குச் சீதனமாக வழங்கப்படுகின்றது, என்றும் சீதன முறை அகற்றப்பட்டால், இந்தச் சொத்துரிமையை பெண்கள் இழக்க நேரிடும் எனறும், சீதனத்திற்கு ஆதரவாக, வலுவான கருத்துக்களும் உண்டு. அத்துடன், பொதுவாகவே, அது ஒரு கட்டாயச் சேமிப்பாகத் தொடங்கி, ஒரு சமூகத்தின் நல்ல பொருளாதாரக் கட்டுமானத்திற்கு உதவுகின்றது என்று சீதனத்திற்குச் சார்பான தர்க்கங்களும் உண்டு.

ஆனால், மணமகன்களிடமிருந்தும், அவர்களது குடும்பங்களிடம் இருந்தும், மட்டுக்கு மீறிய அளவில் மிகுந்த பேராசையுடன் எழுப்பப்பட்ட சீதன வற்புறுத்தல்கள் - பல குடும்பங்களைப் பாதித்ததோடு மட்டுமல்லாமல், மிகப் பெரிய சமூகப் பிரச்சினையாக, சீதனக் கொடுமை உருவாகுவதற்கும் வழி வகுத்தன. 'சீதனக் கொடுமை அழிக்கப்பட வேண்டும்' என்று ஏற்கனவே 1992 சர்வதேச மகளிர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ்ப் பெண்கள், விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளிடம் கோரிக்கை விடுத்தனர், இந்தக் கோரிக்கை, தேசியத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டபோது முறையான நடவடிக்கை எடுப்பதறகு அவர் முடிவு செய்தார்.

**ஆஸ்திரேலியாவிலிருந்து**
**சபேசன்**

முதலில் பொது மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. இப்பிரச்சினை குறித்துப் பகிரங்க விவாதங்களும், கூட்டங்களும் கிராமம் - கிராமமாக நடந்தன. பாடசாலைகள் - கல்லூரிகள் - பல்கலைக்கழகம் - மற்றும் பொது இடங்களில் எல்லாம் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியச் சொத்துடைமைச் சட்டமான, 'தேச வழமைச் சட்டம்' மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டது. இந்த மரபுச் சட்டங்களை நன்கு பரிசீலனை செய்த பிறகு, பெண்களின் நலன் கருதி, மரபுச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன என்று திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவிய தாய்வழிச் சொத்துடைமை முறை, பேச்சுத் திருமணம் - மற்றும் பல சமூக - பண்பாட்டு வழமைகளை ஆழமாகப் பார்த்தபோது, சீதனப் பிரச்சினையானது, பெண்களுக்கு எதிரான சமூக ஒடுக்கு முறையின் ஒரு வெளிப்பாடு என்பது தெளிவாகியது.

ஈற்றில், திருமதி பார்வதி வேலுப்பிள்ளையின் மகனின் பணிப்புரையின் பேரில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீதி நிர்வாகப் பிரிவினர், சீதன நடைமுறை சம்பந்தமான புதிய சட்டவிதிகளை இயற்றினார்கள். இந்தப் புதிய சட்டங்கள் - பெண்களின் சொத்துரிமையை ரொக்கப் பணமாக அன்பளிப்புக் கொடுக்கும் முறையையும் தடை செய்தன. மனைவியின் சொத்து மீது, கணவனுக்கு மேலாண்மை வழங்கும் தேசவழமையின் விதியும் நீக்கப்பட்டது!

ஒரு நாட்டு மண்ணின் விடுதலைக்காக - மொழியின் விடுதலைக்காக - இனத்தின் விடுதலைக்காக - பிற வெளிச் சக்திகளால் மழுங்கடிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பண்பாட்டின் விடுதலைக்காக - வெளிச் சக்திகளுடன் போராடி வருகின்ற அதே வேளையில், தனது சொந்த இனத்திலேயே புரையோடிப் போயிருக்கும், சமுதாயக் கொடுமைகளையும் களைந்து எறிய முற்படுவது, சாதாரண விடயம் அல்ல! அதனால்தான் அது சாத்திரத்தில் இடம்பெறப்போகின்ற விடயம் என்று இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே கூறினோம்.

ஒரு பெண்ணின் ஒழுக்கத்தை, இராமன் போன்ற கணவன், பகிரங்கத்தில் சந்தேகப்பட்டுச் சோதிக்கலாம என்பது மட்டுமல்ல, அவளை இலக்குவணன் போன்ற மைத்துனர்களும் கோடு கிழித்துக் கட்டுப்படுத்தலாம் என்பது போன்ற ஆரிய சிந்தனைகளையும், அவர்களது வழிமுறைகளையும் தமிழனும் ஏற்றுக்கொண்டு தெலுங்கில் பாடி, சமஸ்கிருதத்தில் வழிபட்டு, தன்னைத்தானே இருளில் கட்டிப் போட்டுக் கொண்டான். தமிழ்ப் பண்பாடும், கலைகளும் மீண்டும் புத்துயிர் பெற்று உயர்வதற்கு, சரியான தலைமைதான் வழிவகுக்க வேண்டும்; வழி வகுக்க முடியும்.

கட்டாயச் சீதனக் கொடுமை, எமது சமுதாயத்தில் பெண்ணின் மானுட மதிப்பையே அடியோடு அழித்துவிட முயல்கின்றது. அது கர்ப்பத்தில் இருக்கும் சிசுவை அடையாளம் கண்டு - பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அழித்துவிடும் அளவிற்கு தமிழ்நாட்டில் வேரூன்றி உள்ளது. ஏன், கர்ப்பத்தில் வளரும் சிசு, ஆணாக மாறி, வலிமை பெறுவதற்காக - ஆரியர்களால் சொல்லப்படுகின்ற 'மந்திரங்கள்' தோன்றிய அதர்வணவேத காலத்தில் இருந்து, இந்த நூற்றாண்டு வரை, பெண்ணை ஓர் அடிமைக் கூடாக்கி அழிப்பதற்கு, எமது தமிழினத்தில் புகுந்த ஆரிய சகதிகளும், எம்மினத்து ஆணாத்திக்கமும் உதவின. அவற்றிற்குத் தெரிந்தோ, தெரியாமலோ, பெண்ணினமும் துணைபோயிருக்கின்றது என்பதுதான் வேதனையான உண்மை!

ஆனால் ஈழத்தைப் பொறுத்த வரையில், பெண்ணினத்தின் மேம்பாடு குறித்து, உற்சாகமான உணர்வூட்டும் செய்திகளைக் கேட்டு மகிழ்கின்றோம். அன்று பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்ணையும் விஞ்சிவிட்டாள், தமிழீழ வஞ்சி! இன்று தமிழ் பெண்ணானவள், தனது விடுதலைக்காக மட்டுமல்லாது, தனது தேச விடுதலைக்காவும் களம் இறங்கியுள்ளதை காலம் காட்டி நிற்கின்றது. தன்னையும் விடுவித்து, தன் இனத்தையும் விடுவிக்கப் போராடுகின்ற ஈழப் பெண்களுக்கு எமது வணக்கங்கள்! பெண் விடுதலை என்பது வெறும் பேச்சில் மட்டுமல்லாது, செயலாகவும் எழுந்து நிற்பதை நாம் இன்று ஈழத்தில் காண்கின்றோம். ★

## இடம்மாற்றம்

## றஜனி சலூன்

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகில்
இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை
அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

(சி-29964) – க. நவரட்ணம்



## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1972 - 10 - 24 | 1996 - 09 - 06 |



### அமரர் செல்வன் இரத்தினம் ஜெயன்

(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

ஆண்டுகள் பல அகன்றாலும் அகலாத நினைவுகளாய்
உம் ஞாபகங்கள் எம்முள் அலை மோதுதைய்யா!
கள்ளமில்லா வெள்ளை மனமும் புன்னகை பூத்த
பொன் முகமும் மறைந்ததேனோ
பட்டதாரிகளாய் வெளிவந்தவர்களைக் காண்கையிலே
நீரும் இருந்திருந்தால்.....என,
கண்களை நிறைக்கின்றோம் – இல்லை
அங்கே நீரும் எம் அம்மாவுடன்
கலந்திருப்பீர் என கண்ணீர் துடைக்கின்றோம்
ஆண்டுகள் தான் பல அகலும் – அகலாது
உம் ஞாபகங்கள் எம் நெஞ்சை விட்டு
நித்தம் நித்தம் தவிக்கின்றோம்
நொந்து போன இதயத்தோடு விதியை
நினைந்து நினைவு கூருகின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

(22234) (21-13-16) – குடும்பத்தினர்.


# சட்டவிரோத மின்பாவனையை கண்டுபிடிக்க விசேடகுழு அமைப்பு

## பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

சட்டவிரோத மின பாவனையாளர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தம் தெரிவித்தார். சட்டவிரோத மின்பாவனை, அதனால் ஏற்படும் உயிராபத்துக்கள என்பன அதிகரித்திருப்பது குறித்துக் கேட்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்குடாநாட்டில் மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் பலபகுதிகளிலும் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது.

குறிப்பாக கோண்டாவில், வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் அதிக எண்ணிக்கையானோர் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களைக் கையும்மெய்யுமாகப் பிடிந்து, சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் வகையில் எமது சபை அங்கத்தவர்கள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அக குழுவினர் எதிர்வரும் திங்கள் முதல் தமது பணியை ஆரம்பிக்கவுள்ளார்கள்.

தற்போது மின் விநியோகம் இடம பெறும் பகுதிகளில் விண்ணப்பிப்போருக்கு உடனடியாக மின்விநியோக இணைப்புகள் வழங்கப்படுகின்றன. அப்படி இருக்கும்போது சட்ட விரோத மின்பாவனை அவசியமற்றது என்பதை அனைவரும் உணரவேண்டும் - என்றார் அவர். (ஒ-12)

### குளங்கள் புனரமைப்பு

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறும் குளங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ கொழும்புத்துறை இலந்தைக்குளம் மற்றும் நெடுங்குளம் என்பன ஆழமாகப்பட்டு வருகின்றன.

வண்டல் மண்ணை அகற்றி குளங்களை விஸ்தரிக்கும் இச்செயற்பாடு கிராம மக்களின் பங்களிப்புடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.(ஒ-30)

### பண்ணிசை வகுப்பு ஆரம்பம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையின நுண்கலை மன்றத்தால் பண்ணிசை, மிருதங்கம், வயலின் மற்றும் நடனம் ஆகிய வகுப்புக்கள் மீள்குடியமர்வின பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- மேற்படி வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

### செயலமர்வு

யாழ்கல்வி வலயம் மற்றும் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 இல் 'சுற்றாடல் கல்வி' கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 7ஆம், 8ஆம் தரங்களில் 'சமூகக்கல்வியும் வரலாறும்' பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு 2 நிலையங்களில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. 3 தினங்கள் செயலமர்வு இடம்பெறும். யாழ். கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்திலும் வலிகாமம கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன கல்லூரி மண்டபத்திலும் செயலமர்வு நடைபெறுகிறது. மேற்படி ஆசிரியர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட பிரகாரம் கோட்ட ரீதியில் செயலமர்வு நடைபெறமாட்டாது என்றும் - அறிவிககப்பட்டுள்ளது. (எ-11-152)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 15 - 08 - 1910 | 09 - 08 - 2003 |



### திருமதி அம்பலவாணர் பார்வதி

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்னார் நோயுற்றிருந்த காலங்களில் தனது சிரமத்தையும் பாராமல் உடனுக்குடன் வந்து சிகிச்சையளித்துதவிய டாக்டர் திருமதி கருணாமூர்த்தி சத்தியேஸ்வரி D.A.M Ceylon (யாழ்/மாநகரசபை) அவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம், கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"திருத்தணிகை இல்லம்"
கேணிக்குள ஒழுங்கை,
திருபாலை கிழக்கு.

பிரிவால் வருந்தும்
அன்பு மகள்,
மருமகன் (ச.பாலசுப்பிரமணியம்)
(22191) (21-13-16)



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்


## செப்ரெம்பர் 1 தொடக்கம் செப்ரெம்பர் 7 வரை

### மிதிவெடி, வெடிபொருள்களினால் ஏற்படும் ஆபத்தைத் தடுக்க பொதுமக்களாகிய நாம் அவதானமாக இருப்போம்.

- நாங்கள் செல்லும் இடங்களிற்கு முன்னர் பாவித்த, பாதுகாப்பான பாதைகளையே பாவிப்போம்.



- நாம் புதிய இடங்களிற்குச் செல்லும்போது அவ்விடத்தின் மிதிவெடி அபாயம் பற்றி அப்பிரதேச வாசிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்வோம்.



- எமது பிரதேசத்திற்குள் புதிதாக வருபவர்களிற்கு எமது பிரதேசத்தின் பாதுகாப்பு நிலை பற்றிய சரியான தகவல்களைக் கொடுப்போம்.
- மீளக்குடியமரும் பிரதேசமாக இருப்பின் அப்பிரதேசம் முழுமையாக மிதிவெடி இல்லாத பிரதேசமா என்பதை உறுதிசெய்து மீளக் குடியமருவோம்.
- இனம்புரியாத மர்மப் பொருள்களைக் கண்டால் உரிய இடங்களுக்கு அறிவிப்போம்.



- மிதிவெடிகள், வெடிபொருள்கள் சம்பந்தமான அபாயப் பலகைகள் உள்ள இடங்களிற்குள் நுழையாமலும், அபாயப்பலகைகள் உரிய இடத்தில் உள்ளது என்பதையும் உறுதிப்படுத்துவோம்.
- மிதிவெடி, வெடிபொருள்களின் பாதிப்புக்களை மற்றவர்களிற்கும் எடுத்துக்கூறி மிதிவெடி, வெடிபொருள்களினால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்போம்.

(21-13-16)

**DISTRICT MINE ACTION OFFICE, JAFFNA.**

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி-29881)

# மருத்துவ பீடத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகின்றார் பீடாதிபதி

வெள்ளி விழா ஆண்டில் காலடி வைத்திருக்கும் யாழ்ப்பாண மருத்துவ பீடத்தைத் தொடர்புபடுத்தி அண்மையில், 30.08.03, 02.09.03, 03.09.03 திகதிகளில் உதயனில் பிரசுரிக்கப்பட்ட விடயங்கள் எமது நிலைப்பற்றித் தெளிவுபடுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. எமது உள் முரண்பாடுகளைப் பகிரங்கப்படுத்துவது நாகரிகம் அல்ல என இங்குள்ள பலர் கூறிவருகின்றபோதிலும் மாணவர், பெற்றோர், பிற பீடங்களைச் சேர்ந்தோர் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் எமது பக்க நிலையையும் நியாயத்தையும் வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மருத்துவ பீடம் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. இங்கு கடமையாற்றும் அனைவருமே வேறு இடங்களில் தமக்குக் கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புக்களை மறுத்து எமது பிள்ளைகளுக்குத் தரமான கல்விச் சேவை வழங்கவேண்டும் எனும் ஒரே நோக்கத்திலேயே கடமையாற்றுகின்றனர்.

ஓய்வுபெறும் வயதில் யாழ்ப்பாணத்தில் எவ்வித வசதியும் இல்லாத நிலையில் மருத்துவ பீடத்தை நிறுவி, திறம்பட இயங்கவைக்க கொழும்புக்கும் கைதடிக்கும் ஓடித் திரிந்த முதல் பீடாதிபதி பேராசிரியர் கூவர், உலகப் புகழ்பெற்று அரிய சாதனைகள் புரிந்து மலேசியாவில் குடும்பத்தை விட்டுவிட்டு இங்குவந்து சேவையாற்றிய பேராசிரியர் கனகசுந்தரம், உலக சுகாதார நிறுவன ஆலோசகராக உலகமெல்லாம் சுற்றி வந்தபோதும் யாழ். மருத்துவபீடத்தின் ஆரம்ப காலத்திலிருந்து இன்று தள்ளாத வயதிலும் தளராது தொடர்ந்து கற்பித்துவரும் பேராசிரியர் சிவஞானசுந்தரம், உயரிய விழுமியங்களை இம்மியும் வழுவாது கடைப்பிடித்து உதாரண வைத்தியராக ஓய்வுபெற்ற பின்னும் இயன்றவரை கற்பித்துவந்த பேராசிரியர் சிவசூரியா, மகன் காணாமற்போன கவலையில் உடல் தளர்ந்த போதும் தமது இறுதி மூச்சுவரை கற்பித்துக்கொண்டிருந்த பேராசிரியர் சரவணபவானந்தன், ஆராய்ச்சியில் சிறப்புப் பரிசில் பெற்றுக் கொழும்பு மருத்துவ பீடத்தில் இருந்த தமது பதவியைவிட்டு இங்குவந்து இளமைத் துடிப்புடன் செயற்பட்டதுடன் இடப்பெயர்வின் பின் மிதிவெடி அபாயத்தையும் பொருட்படுத்தாது உயிரைத் துச்சமெனக் கொண்டு மருத்துவ பீடவளாகத்தினுள் துணிவுடன் முன்சென்று மற்றவர்களும் வந்து கடமையாற்ற உதவிய பேராசிரியர் பாலசுப்பிரமணியம் என போர்க்காலத்தில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இடைவிடாது கற்பித்த, இன்னும் கற்பித்துக்கொண்டிருக்கின்ற ஆசிரியர் பலரது உழைப்பின் மொத்த வடிவமே இன்றுள்ள மருத்துவ பீடமாகும். இங்குள்ள ஒவ்வொருவரும் இம்மருத்துவ பீடத்துக்காகச் செய்த பங்களிப்புகளையும் பட்ட இன்னல்களையும் பக்கம்




பக்கமாக விவரிக்கலாம்.

ஆரம்ப காலத்திலிருந்து மருத்துவ பீடத்தின் சகல நடவடிக்கைகளிலும் போதனா வைத்தியசாலை வைத்தியர்களும் வைத்திய நிபுணர்களும் பங்கெடுத்து வந்துள்ளனர். இது இலங்கையிலுள்ள ஏனைய மருத்துவ பீடங்களுக்குக் கிடைக்காத, யாழ். மருத்துவ பீடத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து தரத்தைப்பேணுவதற்கு உறுதுணையான ஒன்றாகும்.

எமது ஆசிரியர் குழாத்தில் சிலர் தமது இறுதிவரை கடமையாற்றியுள்ளனர். வேறு சிலர் இருக்கும்வரை திறம்படக் கடமையாற்றிவிட்டு போரின் தாக்கத்தைத் தாங்கும் எல்லை தாண்டியதால் அல்லது குடும்பச் சூழ்நிலை காரணமாக அல்லது வேறு காரணங்களுக்காக மிகவும் கவலையுடன் விலகிச் சென்றுள்ளனர். இந்த 25 வருடங்களில் பல சந்தர்ப்பங்களில் கருத்து மோதல்களும் அதனால் கோபதாபங்களும் இங்கு ஏற்பட்டுள்ளன. அவை அனைத்தும் கல்வியை மேம்படுத்தும் முறைபற்றியும் மாணவர் நலன் பற்றியும் ஏற்பட்ட விவாதங்களே. அத்தகைய விவாதங்கள் ஆக்கபூர்வமாக அமைந்து முன்னேற்றம் காணப்படுவதே மருத்துவ பீட மரபாக இருந்துவருகின்றது. இத்தகைய விவாதங்கள் பரஸ்பர நட்பையும் மரியாதையையும் கெடுத்ததில்லை.

ஆனால், இத்தகைய விவாதங்களைத் தனிப்பட்ட பிரச்சினையாக்கி, காலவிரயத்தை ஏற்படுத்தி, தன்னைக் கலைப்பதற்கான முயற்சியெனப் பிரசாரம் செய்தமை பேராசிரியர் குணானந்தத்தின் தனிப்பட்ட இயல்பாகும். ஏறத்தாழ இரண்டு வருடங்களாக அவரது கற்பித்தல் தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் ஒழுங்கமைப்புகள் ஒத்து வராத நிலையில் அவரது ஒப்பந்த நியமனத்தைப் புதுப்பிப்பதில்லை எனும் முடிவிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் மருத்துவ பீடத்துக்கு ஏற்பட்டது.

பேராசிரியர் குணானந்தத்தின் கற்பித்தல் ஏன் ஏற்புடையதாக இருக்கவில்லை என்பதை பகிரங்கமாக விமர்சிப்பது நல்லதல்ல. இதுதொடர்பாக அவர பிரதமர்வரை முறைப்பாடு செய்துள்ளமையை அங்கிருந்து வந்த கடிதத்திலிருந்து அறிய முடிந்தது. அதற்குரிய பதில் அனுப்பப்பட்டுள்ளது. அவர் எழுதியதுபோல் மேலிடத்தின் ஆணையை மீறுவது நடைமுறையில் சாத்தியமா என்பதை வாசகரே தீர்மானிக்கலாம். ஆயினும், 04.09.03 உதயனைப் பார்த்த பின் இதுபற்றி விளக்கமளிக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

பேராசிரியர் குணானந்தம் நரம்பியல் நிபுணர் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால், அவரது தகைமைகள் இலங்கைப் பல்கலைக்கழக விதிகளின்படி சத்திரசிகிச்சைத் துறையில் நிரந்தர நியமனத்துக்கு ஏற்புடையதாகாது என்பது அவர் இங்கு வருமுன்னேயே அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டுப் பட்டப்பின்படிப்பு தகைமைகள் உள்ளூரில் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது விதி. ஒப்பந்த அடிப்படையில் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டபோதும் மூடியிருந்த மருத்துவ பீட சத்திரசிகிச்சைப் பிரிவை இயங்க வைத்தவர் இரண்டு மாதங்களின் பின் வந்து சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர் ஆவார். இவர்கள் இருவரும் மருத்துவ பீடத்தின் அழைப்பை ஏற்று வந்தவர்களே.

எந்த ஓர் ஆசிரியரும் தான் செயற்படும் துறையிலே கற்பிப்பதுதான் முறை. இந்தவகையிலே பொது சத்திரசிகிச்சையை மேற்கொள்ளும் வைத்திய கலாநிதி தயாளன் சத்திரசிகிச்சை கற்பிக்கத் தகுதியுடையவர். பேராசிரியர் குணானந்தம் நரம்பியல் கற்பிக்கவே பொருத்தமானவர். ஆனால், இன்றுவரை அவர் நரம்பியலில் ஒரு வகுப்புக்கூட எடுக்கவில்லை. தனக்கு அனுபவமில்லாத துறையில் மற்றவர்களின் நோயாளிகளை வைத்து கற்பிக்கவேண்டுமென பிடிவாதம் பிடிப்பது ஏன் என்று எமக்கு விளங்கவில்லை.

பேராசிரியர் குணானந்தம் சேர்த்த நிதிபற்றி வைத்திய பட்டதாரி எழுதியதால் அதுபற்றி விளக்கவேண்டியுள்ளது. 2000 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மாணவர்களால் நடத்தப்பட்ட நிகழ்வின் கணக்குகள் நிர்வாகத்துக்கும், நிதி, மாணவர்களின் நலனுக்கும் கிடைக்காத நிலையில் இதுபற்றி விவாதித்த மூதவை (மருத்துவ பீடமல்ல) மூத்த பேராசிரியர் ஒருவரை இதுபற்றி ஆராயப் பணித்தபோது, அதுவரை தனது சொந்தமாக வைத்திருந்த நிதியை அவசர அவசரமாக, இருவரைச்சேர்த்து நம்பிக்கை நிதியமாக்கினார். அந்நிதியைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கவேண்டும் என மூதவை கேட்டபோது, ஏற்படுத்தப்பட்ட நிதிய விதிகளின்படி நீதிமன்றினால் மட்டுமே நிதிமாற்றப்பட முடியுமென்பதால் அவரே நீதிமன்றம் சென்றார். நீதிமன்ற நடவடிக்கையின்போது நிதியின் முதல் வருட வட்டியைப் பேராசிரியர் பெற்றிருப்பது வெளிப்படை. அந்த வட்டியையும், அத்தொகையை அவர் வைத்திருந்த காலத்துக்கான வட்டியையும் பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தவேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டது.

வைத்தியப் பட்டதாரி குறிப்பிட்ட பேராசிரியரின் 'சிறு சம்பளம்' துணைவேந்தரின் சம்பளத்தைவிட அதிகமாக இருந்ததைத் துணைவேந்தரே கூறியதாக ஞாபகம் உண்மையிலேயே குறைந்த சம்பளம் பெற்றுக்கொண்டு ஒப்பந்த முறையில் கடமையாற்றி வந்த பலர் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோதும் அதற்காகத் தமது கற்பித்தற் செயற்பாடுகளை சற்றும் தளர்த்தவில்லை; மாணவரைத் தூண்டிவிட்டுத் தமது தேவைகளை நிறைவேற்ற முற்படவில்லை. பல்வேறு காரணங்களுக்காக வேறு இடங்களில் கடமையாற்றச் சென்றாலும் மருத்துவ பீடத்திற்கான தமது பங்களிப்பைத் தொடர்ந்தும் தமது சக்திக்கேற்ற வகையில் வழங்கியே வருகின்றனர்.

மாணவர் பழிவாங்கப்படுவது பற்றித் தெளிவுபடுத்தவேண்டும். படிக்கும் காலங்களில் மாணவர் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியிருப்பது தவிர்க்கமுடியாதது. பரீட்சை என்று வரும்போது, வெளியிட பரீட்சகர்களை வரவழைத்து பரீட்சைகளை நியாயமாக நடத்துவதே மருத்துவ பீட மரபாகும். பழிவாங்குவதோ பாரபட்சமாகப் புள்ளி வழங்குவதோ மருத்துவ பீடமரபில் அறவே இல்லை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். போர் நிர்ப்பந்தத்தில் பரீட்சகர் வரமுடியாதபோது வேறுவழி இல்லாததால் இங்குள்ளவரே பரீட்சைகளை நடத்தினர். ஆனால், பரீட்சகர் வரவிரும்பி, பயண ஏற்பாடுகளையும் செய்தபின் அவர்கள் வருமுன்னே அவசர அவசரமாகத் தானே பரீட்சையை நடத்திமுடித்த தான்தோன்றித்தனம் பேராசிரியருக்கே உரித்தானது. அதன் பின் நிர்வாகம் கட்டாயமாக வெளியிட பரீட்சகர்களை வரவழைத்து பரீட்சைகளை நடத்த முற்பட்டபோது இவர் தாமாகவே பரீட்சை நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக்கொண்டார்.

> *வைத்திய கலாநிதி*
> **க.சிவபாலன்**
> *பீடாதிபதி, மருத்துவ பீடம்,*
> *யாழ். பல்கலைக்கழகம்.*

பேராசிரியர் குணானந்தம் இங்கு வந்தபோது எல்லோரும் அவர் மீது அபரிமிதமான மதிப்பைக் கொண்டிருந்தனர். காலப்போக்கில் எமது மாணவரின் செயற்றிறன் பற்றி எழுந்த விமர்சனங்களும் இங்குள்ளவர்கள் கண்ட, கேட்ட விடயங்களும் அவரது கற்பித்தல் பற்றி ஆராயவேண்டிய கடமையை ஏற்படுத்தின. ஆயினும், இங்குள்ளவர்கள் நாகரிகம் கருதி இவற்றை வெளிப்படுத்தாது நிலைமையைச் சீர்செய்ய முனைந்தனர். ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஏற்று நடக்க விரும்பாத பேராசிரியர் குணானந்தம், தனக்கு உதவ வந்தவர்களை உதாசீனப்படுத்திவிட்டார்.

இறுதியாக, 'நெஞ்சிலுரமில்லாத நேர்மைத்துணிவில்லாத' ஒருவர் தவிர்ந்த ஏனைய வைத்திய பட்டதாரிகள் பற்றி ஒரு வார்த்தை. யாழ்ப்பாணப் பட்டதாரிகள் காலா காலமாக வெளிமாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் பல்வேறு காரணங்களுக்காக செல்வதைக் கவலையுடன் அவதானித்தே வருகின்றோம். இதற்கு அவர்களை மட்டும் குறைகூறுவது சரியல்ல: அவர்களது பெற்றோர், திருமண உறவுகள், சமூக நிலைப்பாடுகள் எனப் பல காரணிகள் உள்ளன. பேராசிரியர்கூட யாழ்ப்பாணத்தைவிட்டு ஓடிச்சென்று வாழ்க்கை வசதிகளை மேம்படுத்திக் கொண்டு திரும்பியவரே. ஆனால், வடகிழக்கில் ஓரளவுக்கேனும் சுகாதார சேவை மக்களுக்குக் கிடைப்பதற்குக் காரணமாக இருப்பவர்களில் பெரும்பான்மையானோர் தன்னலமற்ற சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் எமது பட்டதாரிகளே. இப்படியான ஒரு சில பட்டதாரிகளையாவது உருவாக்கியுள்ளோமென்று நாம் பெருமையடைகிறோம். *

# வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50 லட்சம் நிதி திரும்பும் நிலை

## போதிய மணல் பெறுவதில் உள்ள சிக்கலால்

யாழ்ப்பாணம்,செப்.6

மணல் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக யாழ் மாவட்ட வீதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபா நிதி திரும்பிவிடும் நிலை உருவாகியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். பிராந்திய பதில் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதான வீதிகள் பல திருத்தப்பட வேண்டியுள்ளன. இவற்றிற்காக அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒருபகுதி வேலைகளே இடம்பெற்றுள்ளன.

எனினும், கண்டி வீதி உட்பட காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி என குடாநாட்டின் பல வீதிகளில் அவசர புனரமைப்பு வேலைகள் செய்யப்படவேண்டியுள்ளன.

இதற்கான தார், கிரேவல் முதலியன பெறக்கூடியதாக இருக்கிறது. ஆனால் மணல், ஊரி என்பவற்றைப் பெறுவதில பெரும் சிரமம் ஏற்படுகின்றது.

கடந்த காலங்களைவிட இம்முறை மணல் பெறுவதில் நாம் பெரும் கஷ்டங்களை, தடைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதியிலேயே மணல் பெறுவதற்கு அரச அதிபரினால் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கிருந்து மணல் பெறுவதில் நாம் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம்.

இதனால், வீதி அபிவிருத்திக்கு என எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ரூபா 50 லட்சம் திரும்பிச் செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த இரண்டு மாதத்திற்கும் மேலாக மணல் பெறுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கடும் முயற்சி எடுத்து வருகின்றபோதிலும் அவ்விடயம் சாத்தியப்படாமலேயே செல்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

பருவகால மழை விரைவில் ஆரம்பிக்க உள்ளது. அப்போது வீதி திருத்தும் பணிகளை நிறுத்த வேண்டியிருக்கும் - என்றார். (ம-12)

## கிணற்றில் தவறிவீழ்ந்து குழந்தை மரணம்

யாழ்ப்பாணம்,செப்.6

கிணற்றினுள் தவறிவீழ்ந்த ஒரு வயதுக் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்தது.

நேற்றுமுன்தினம் காலை முலைவைச் சந்திப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தெய்வேந்திரராசா தருசுஜன் என்ற குழந்தையே உயிரிழந்தது. தாயார் வெளியே சென்றிருந்தசமயம், குழந்தை தாயைத் தேடி கிணற்றடிப் பக்கமாகச் சென்றுள்ளதாகவும் - பாதுகாப்பற்ற கிணற்றினுள் தவறி வீழ்ந்த குழந்தை நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் - கூறப்பட்டது.

குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-9)

# தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி புலிகளின் முகாமை அகற்றவேண்டும்

## ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. வேண்டுகோள்

கொழும்பு,செப்.6

திருகோணமலை மணிராசகுளத்தில் புலிகள் புதிய முகாம் அமைத்தனர். இது விடயத்தில் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இப்போது அப்பகுதியில் புலிகள் மேலும் ஒருமுகாமை அமைக்கின்றார்கள் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. ஜனாதிபதி தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து புலிகளின் இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவேண்டும்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்றுமுன்தினம் காலை கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் முகாம்களை அமைப்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். புலிகளின் இந்த நடவடிக்கைகள் குறித்து அரசு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, ஜனாதிபதி தமக்கு மக்கள் வழங்கிய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் பரவலாக நடைபெறும் வேலை நிறுத்தங்கள் அரசைக் கவிழ்க்க ஜே.வி.பி. செய்துவரும் சதி என்ற அரசின் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையிலான சட்டங்களை அரசு கொண்டுவந்துள்ளது. இவற்றை எதிர்த்து ஆங்காங்கே வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், டாக்டர்கள் ஆகியோர் தங்களது சம்பள முரண்பாட்டை நீக்கும்படியே வேலை நிறுத்தம் செய்தனர். ஜே.வி.பி. இவ்வேலை நிறுத்தங்களுடன் சம்பந்தப்படவில்லை. அரசைக் கவிழ்ப்பதென்றால் நாங்கள் பொது வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருப்போம். இப்படியிருக்க ஜே.வி.பி. அரசைக் கவிழ்க்க வேலைநிறுத்தங்களைத்தூண்டி விடுவதாக எம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு அபத்தமானது.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ எம்.பி. கூறினார்.

# வடக்கு - கிழக்கு மாகாண அரச பொறுப்பேற்கும் இல்ல வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்த்தல்

சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் அரச பொறுப்பேற்கும் சிறுவர் இல்லத்திலுள்ள கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. உதவி மேற்றன் 2. இல்லத்தாய்**

***1. உதவி மேற்றன்***

1. விண்ணப்பதாரர்
   - அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   - ஆ) 2003.09.01ஆம் திகதி 21 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்.

அத்துடன்

2. i) விண்ணப்பதாரர் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு சேவை நிறுவனத்தினால் பதிவுசெய்யப்பட்ட வலிந்துதவு சமூகசேவை இல்லமொன்றில் கடமை புரிபவர், அத்தகைய சிறுவர் இல்லத்தில் அல்லது இல்லங்களில் 3 வருடங்களுக்கு குறையாது தொடர்ச்சியான சேவை அனுபவமுடையவர்.
   ii) க.பொ.த. (சா.த.) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருந்து, இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் மொத்தமாக 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
3. சம்பளம் - 3,990/=
4. 01 பதவிக்கு வெற்றிடமுள்ளது.
5. அதிகூடிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கல்வித்தகைமையும், உடல் நிலையையும் கருத்திற்கொண்டு ஆள்சேர்ப்புக்கள் இடம்பெறும்.
6. நியமனங்கள் தற்காலிகமானதும், ஒப்பந்த அடிப்படையிலும் வழங்கப்படும்.
7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தயாரித்து 2003.09.15ஆம் திகதிக்கு முன் "ஆணையாளர், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களம், திருகோணமலை" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் "சிறுவர் இல்லத்திற்கான உதவி மேற்றன் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

***2. இல்லத்தாய்***

1. தகைமைகள்
   - அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   - ஆ) 2003.09.01ஆம் திகதி 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்.
2. i) விண்ணப்பதாரர் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு சேவை நிறுவனத்தினால் பதிவுசெய்யப்பட்ட வலிந்துதவு சமூகசேவை இல்லமொன்றில் கடமை புரிபவர், அத்தகைய சிறுவர் இல்லத்தில் அல்லது இல்லங்களில் 03 வருடங்களுக்கு குறையாது தொடர்ச்சியான சேவை அனுபவமுடையவர்.
   ii) க.பொ.த. (சா.த.) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஒருதடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருந்து, இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் மொத்தமாக 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
3. சம்பளம் - 3,990/=
4. 03 பதவிகளுக்கு வெற்றிடமுள்ளது.
5. அதிகூடிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கல்வித் தகைமையும், உடல் நிலையையும் கருத்திற்கொண்டு ஆள்சேர்ப்புக்கள் இடம்பெறும்.
6. நியமனங்கள் தற்காலிகமானதும், ஒப்பந்த அடிப்படையிலும் வழங்கப்படும்.
7. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தயாரித்து 2003.09.15ஆம் திகதிக்கு முன் "ஆணையாளர், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களம், திருகோணமலை" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் "சிறுவர் இல்லத்திற்கான இல்லத்தாய் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**
புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை அமைச்சு,
வ.கி.மா.,
திருகோணமலை.

(C/29963)(24-13-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்*

### திரு.பி.வேலுப்பிள்ளை

அவர்கள் 2003.08.22 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிபதி மேன்மைதங்கிய இ.த.விக்னராஜா முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் பிரபலம்மிக்க சமய, சமூக, ஆன்மீகத் தொண்டராவார். இவரை பல்லாண்டு காலம் வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மதுவரி அலுவலகம்,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

வடபிராந்திய மதுவரி உத்தியோகத்தர்கள்.

(22247)(25-24-13-16)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

06.09.2003

HAPPY BIRTHDAY



திரு.திருமதி தேவநீதன் - சுகந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

### வைஷ்ணவி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.09.2003) சனிக்கிழமை சுவிஸில (SWISS) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

வைஷ்ணவிக்குட்டியை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, சித்தி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் காளி அம்பாளின் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

*1010/26, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார்கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**செ.சிவசுப்பிரமணியம்** (அப்பப்பா).

(22181)(24-13-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. செல்லையா பத்மநாதன்

அவர்கள்
(யாழ். மாவட்ட அரச அதிபர்)

கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக பருத்தித்துறை இறங்குதுறையில் அமைய அடிப்படையில் கடமைபுரிந்த 41 உத்தியோகத்தர்களாகிய எம்மை, தனது சொந்த முயற்சியின் பயனாக இலங்கை துறைமுக அதிகார சபையின்கீழ் நிரந்தர உத்தியோகத்தர்களாகக் கடமை புரிவதற்கு வழியமைத்த எமது அன்புக்குரிய அரச அதிபர்

உயர்திரு.
**செல்லையா பத்மநாதன்**

அவர்களை நன்றியுடன் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவை மேலும் எமது மக்களுக்குத் தொடர்ந்தும் கிடைக்க ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பருத்தித்துறை
துறைமுகம்.

**துறைமுக உத்தியோகத்தர்கள்.**

(22246) (24-16-13)

### தலதா மாளிகை குண்டுவெடிப்பு வழக்கு:

# குற்றஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்பதா? தீர்ப்பு 11ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,செப்.6

வழக்கில் வெற்றி பெறுவதன் மூலம் பொலீஸார் தமக்கு பதவி உயர்வினைப் பெறுவதற்காகவே நிரபராதிகளைக் கைதுசெய்து அவர்களைத் தாக்கி, வற்புறுத்தி வாக்குமூலங்களைப் பெற்று வழக்கினைச் சோடித்திருக்கிறார்கள்.

கண்டி தலதா மாளிகைக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்றுமுன்தினம் கண்டி மேல் நீதிமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1998ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி இடம்பெற்ற தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் கண்டி மேல்நீதிமன்றத்தில் நீதிவான் லேக்கம் வசம் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபரான சுப்பிரமணியம் ரவீந்திரன் தலைமறைவாகியுள்ளார், ஏனைய மூன்று சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பாக நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த விசாரணையில் தனது பக்கத் தொகுப்புரையை சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாசித்தார்.

அடிப்படை மனித உரிமைகளுக்கமைய இரண்டாம், மூன்றாம் எதிரிகளிடம் அவர்களது தாய் மொழியான தமிழ்மொழியில் வாக்குமூலத்தை எழுதிவாங்காமல், சிங்கள மொழியில் தயாரித்த வாக்குமூலத்தை ஒப்புதல் வாககுமூலம் எனத் தெரிவித்திருப்பது சட்டத்துக்கு விரோதமான செயல் என்றும் இதனை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் -

சட்டத்தரணி விநாயகமூர்த்தி கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பான தீர்ப்பை எதிர் வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் சந்தேகநபர்களை அதுவரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## சங்கம நிகழ்வு

கைதடி,செப்.6

கைதடிப் பிரதேச எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு கைதடிப் பிரதேச எழுச்சிப் பேரவையின் செயலாளர் இராஜதீபன் தலைமையில் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

இந்நிகழ்வில் சகலரும் கலந்து கொள்வதோடு சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான முன்மொழிவுகளையும் வழங்குமாறு கைதடிப் பிரதேச எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர். (ஒ-75)

# 400 கனிஷ்ட பாடசாலைகளுக்கு தலா 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு

நாடு முழுவதும் உள்ள கனிஷ்ட பாடசாலைகளில் சுமார் 400 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கென கல்வி அமைச்சு 40 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நாட்டிலுள்ள முன்னணிப் பாடசாலைகளிலேயே கல்விகற்க வைப்பதற்கு விரும்புகின்றனர். இதனை மாற்றும் முகமாகவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக இந்த ஆண்டில் 50 கனிஷ்ட பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு மேற்படி நிதியில் இருந்து தலா 10 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ஒ-10)

## குடாநாட்டிலும் எரிபொருள் விலைகள் நேற்றுமுதல் உயர்வு

அரியாலை,செப்.6

யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நேற்றுக்காலை முதல் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய விலைகளின் அடிப்படையில் பெற்றோல் லீற்றர் ஒன்று 64 ரூபா 50 சதமாகவும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 28 ரூபா 05 சதமாகவும், டீசல் ஒரு லீற்றர் 35 ரூபா 50 சதமாகவும் உயர்த்தப்பட்டன. (ஒ-17)

### பிரச்சினைகளைத் தவிர்க்க

# சங்கத்தில் பதிவு செய்த ஓட்டோவில் பயணியுங்கள்

## ஓட்டோச் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.6

ஓட்டோச் சங்கத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்போரின் ஓட்டோக்களில் பயணம் செய்யும்படி பொதுமக்களைக் கோரத் தீர்மானிக்கப்பட்டது.

சுன்னாகத்தில் அண்மையில் இடம்பெற்ற வலிகாமம் கோட்டத்துக்கு உட்பட்ட ஓட்டோ சாரதிகளுக்கான கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் க.மனோகரன் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஒவ்வொரு ஓட்டோக்களுக்கும் ஓட்டோச் சங்கம் வழங்கிய இலக்கங்களைப் பயணிகள் ஓட்டோவில் பயணம் செய்வதற்கு முன்னர் பார்வையிட வேண்டும் என்றும் -

ஓட்டோ சங்கத்தில் தமது ஓட்டோக்களைப் பதிவுசெய்து இலக்கம் மற்றும் அடையாள அட்டை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளாத ஓட்டோக்களில பயணிகள் பயணம் செய்யக்கூடாது என்றும் - பொது மக்களைக் கோருவதென்று இக்கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

அண்மைக் காலமாக ஓட்டோ சாரதிகள் பற்றிச் சங்கத்துக்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இவ்வாறான நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளன. (ஒ-10-86)

## பாவனைக்குதவாத தேயிலை அழிப்பு

கரவெட்டி,செப்.6

நெல்லியடி பொதுச்சந்தைப் பகுதியில் பாவனைக்கு உதவாத தேயிலை விற்பனையில் ஈடுபட்ட சிலர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் சிக்கினர்.

பொதி செய்யப்பட்ட தேயிலையைச் சந்தையில் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தவர்கள் மீது சந்தேகம் கொண்ட சுகாதாரப் பரிசோதகர்கள் பொதிகளைப் பிரித்துப் பார்த்தபோது அவற்றுள் பாவனைக்கு உதவாத தேயிலை இருப்பதை அறிந்து கொண்டனர்.

இவை தென்பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்டே விற்பனை செய்யப்பட்டதாக விசாரணைகளின் இருந்து தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து அத்தேயிலைப் பொதிகளை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றி அழித்தனர். (ஒ-10-70)

# நீதிமன்ற ஊழியரின் பணிக்கு இடையூறு செய்த 5பேர் கைது

அச்சுவேலி,செப்.6

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றுவதற்குச் சென்ற உத்தியோகத்தர்களை அவர்களது பணியைச் செய்யவிடாது தடுத்த ஐவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தூர் மேற்கில் காணித் தகராறு தொடர்பாக நீதிமன்றம் விடுத்த உத்தரவை நிறைவேற்றச் சென்ற நீதிமன்ற ஊழியரே அப்பகுதியைச் சேர்ந்தவர்களால் தடுக்கப்பட்டனர்.

இதனையடுத்து புத்தூர் மேற்கைச் சேர்ந்த பெரியான் அப்புத்துரை, சின்னவன் தம்பிராசா, சத்தியநந்தன் தவமலர், தெய்வேந்திரம் அன்னம், உருத்திரன் லலிதாதேவி ஆகிய ஐவரும் அச்சுவேலிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பொலீஸார் இவர்கள் ஐவரையும் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்ததை அடுத்து இவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ஒ-10-11)

## தொழிற்பயிற்சி நிலையத்துக்கு புதியகட்டடம்

யாழ்ப்பாணம்,செப்.6

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தினால் கொக்குவில் மேற்கில் நடத்தப்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு விரைவில் நிரந்தர கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியதவியை தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப்பீடம் வழங்கவுள்ளது.

# வீதிப் பெயர்ப் பலகைகள் விஷமிகளால் அபகரிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.6

வீதிப் பெயர்ப்பலகைகளை உடைத்து அவற்றில் உள்ள இரும்புக் குழாய்கள், கம்பிகள் மற்றும் பலகைகளை அபகரிக்கும் செயல்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

தனியார் நிறுவன அனுசரணையுடன் வீதிகளின் பெயர்கள் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் கடந்த ஜனவரி மாதம் வீதியோரங்களில் நடப்பட்டன. புதிதாக ஒரு இடத்திற்கு செல்வோர் வீதிகளின் பெயர்களை அறிந்துகொள்ள இப்பெயர்ப்பலகைகள் பெரிதும் உதவின.

இந்நிலையில், சில சமூக விரோதிகள் இப்பெயர்ப்பலகைகளை உடைத்து அபகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் சில விஷமிகள் இப் பெயர்ப்பலகைகளை உடைத்து, வீதிகளில் எறிந்துவிட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். சுபலகம், கொழும்புத்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இந்த அடாவடித்தனங்கள் அதிகளவில் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-12)

## விகாரை அருகே வெடிபொருள்கள் மீட்கப்பட்டன!

கொழும்பு,செப்.6

கண்டி, சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மல்வத்தை விகாரையின் மதில் ஓரமாக ஜே.ஆர்.ரக கைக்குண்டுகள் இரண்டும், வெடிக்க வைக்கும் சாதனமொன்றும் பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் விஜயம் செய்யும் இவ்விகாரையின் அருகே இத்தகைய வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளமை தமக்கு அதிர்ச்சி அளித்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி)

# மக்கள் முகம்



ஏழாலை மேற்கைச் சேர்ந்தவரும் சிறுவிளான் கனகசபை வித்தியாலயத்தின் அதிபருமான ஆறுமுகம் சிறிதரன், யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், சமீபத்தில் மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். (ஒ-150)

★ ★ ★ ★



வரணி, கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த செல்லையா நவரத்தினசாமி யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சமீபத்தில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி, வல்வெட்டி சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், கொழும்பு பிறவுன்ஸ் நிறுவன முன்னாள் வடபிராந்திய இணைப்பு அதிகாரியும், கொடிகாமம் ப.நோ.கூ.சங்க முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினரும், கரம்பைக்குறிச்சி கூட்டுறவு சங்க.கிளை இல.16இன் செயலாளரும், திக்கில் கந்தசாமி கோவில் நிர்வாகத்தின் முன்னாள் செயலாளரும், வரணி மகாவித்தியாலய ஆங்கில ஆசிரியரும், வரணி பொது நூலக அபிவிருத்திச்சபைச் நிர்வாக சபை உறுப்பினரும் ஆவார்.(ஒ-170)

★ ★ ★ ★



தொண்டமானறைச் சேர்ந்த இராசரத்தினம் சண்முகலிங்கம் (பவுண் ஐயா) அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவா ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாவர். இவர் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலய பழையமாணவர் சங்கத்தினதும் தொண்டைமானாறு பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபையினதும் தொண்டைமானாறு நற்பணி மன்றத்தினதும் தலைவர் ஆகவும் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் போஷகராகவும் உள்ளார்.

★ ★ ★ ★



யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கந்தசாமி நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்ப்பாணம், செங்குந்த இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். இவர் கிராம முன்லேற்றச் சங்கம், இளம் விவசாயிகள் சங்கம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர். இவர் கடந்த 35 வருடங்களாக இலங்கையில் பல பாகங்களிலும் அரசாங்க திணைக்களங்களில் எழுதுவினைஞராக கடமையாற்றியுள்ளார்.




புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 41ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை விழாவை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.

# மரங்கள் தறிக்கப்பட்டதற்கு பிரதேசசபையிடம் விளக்கம்

வலி.வடக்கு,செப்.6

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தினுள் நின்ற மரங்கள் வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து பிரதேச சபையிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரச காணியில் இருந்த இந்த மரங்களைத் தறிப்பதற்கு முன்னனுமதி பெறவோ அன்றி சட்ட நிதிப் பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்படவோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் சம்பந்தமாக வலிகாமம் தென்மேற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனையிலும் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

### இளம்பெண்ணுடன் நின்ற

# தவறான எண்ணம் கொண்ட இளைஞர்கள் விரட்டியடிப்பு

## சுண்டிக்குழியில் சம்பவம்

அரியாலை,செப்.6

சுண்டிக்குழி, பழைய பூங்கா வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் தவறான நோக்கத்துடன் நின்று கொண்டிருந்த இளைஞர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. இவர்கள் மீது சந்தேகம் கொண்ட சிலர் அவர்களை பிடிக்க முயற்சித்ததாகவும் - ஆயினும் அந்த இளைஞர்கள் தம்மைப் பிடிக்க முயற்சித்தவர்களை தள்ளி விட்டுத் தப்பியோடிவிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சுண்டிக்குழி, ஈச்சமோட்டை ஆகிய பகுதிகளில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகவும் -

இவற்றை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-17)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும் கனடாவில் பிரஜாவுரிமையுடன் தொழில் புரிபவருமான 33 வயதுடைய சகோதரனுக்கு அவரது அண்ணன் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமுள்ள மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார். தொடர்பு:- J.B. பிள்ளை, 175, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 5032.(22123)

யாழ். இந்து கௌரவ குடும்பத்து, PHI புலமைப்பரிசிலில் ஆறு மாத பயிற்சிக்கு LONDON செல்லவுள்ள மணமகனுக்கு 23 வயதுக்குட்பட்ட, அழகான மணப்பெண் தேவை. தொழிலுள்ளவருக்கு முன்னுரிமையுண்டு. தொடர்பு:- விள.இல. 2022, C/o உதயன். (22251)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்து, 1965 கனடாவில் வீடுள்ள கணக்காளருக்கு கனடா செல்ல விரும்பும் கல்வியுள்ள மணமகனும் (இரட்டையர் சகோதரர்) 1965 வலிகாமம் வர்த்தகருக்கும் அழகான மணப்பெண் தேவை. (மாற்றாகவோ/தனியாகவோ) ஜாதகம் முழு விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விள.இல. 2021, C/o உதயன்.(22252)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 35 வயது, ஆசிரியை (B.A. Dip.Ed.) மணமகளுக்கு அரச/கூட்டுதாபனத்தில் வேலை செய்யும் மணமகனை எதிர்பார்க்கின்றோம். விளம்பர இல.2023, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-30007)

## திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு ஸ்பொன்சர் மணமக்களின் குறிப்புகளும், உள்நாட்டு ஆசிரியர், எழுதுவினைஞர், வர்த்தகர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுண்டர்கள் மணமக்களின் குறிப்புக்களும் கத்தோலிக்கரினது தகவல்களும் எம்மிடம் உண்டு. தொடர்பு:- கல்யாணமாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். கொழும்பில் கல்யாணமாலை T.P. 338162, Fax:- 338161. (22214)

## தவறிவிட்டது

பெரியவிளான், இளவாலையைச் சேர்ந்த அற்புதம் அன்ரனியம்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 315572341V), விசேட அ.அ. (இல. 610794 - மன்னார்) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிந்திப்பந்தல் - இளவாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (22249)

நயினாதீவுக்கும், யாழ்ப்பாணம் 17/7, ஐயனார் கோவில் வீதிக்கும் இடையில் கிருஸ்ணர் பென்ரன் ஒன்று 03.09.2003இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (22240)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Great, Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22254)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், Tetra Brown தடுப்பு மருந்து போட்ட சேவல் குஞ்சுகள் 15.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவுசெய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22224)

## வீடு விற்பனைக்கு

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் 3 பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. உரிமையாளர் கனடா செல்லவுள்ளதால் உடன் தொடர்பு கொள்ளவும். S.நாகராஜா, இல.24, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (22250)

## மாடி வீடு விற்பனைக்கு

யாழ்.மாநகர எல்லையுள் பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுள் 5000 சதுர அடி பரப்பில் 6 படுக்கை அறைகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தனியார் பாவனைக்கோ, உல்லாசப் பயணிகள் விடுதியாகவோ அல்லது வேறும் பல வர்த்தக நோக்கத்திற்காகவோ பாவிக்க உகந்தது. தொடர்பு: 077-6154263. (22266)

## வெளிநாட்டவர்களே....

யாழ்ப்பாணத்தில் நடந்தவற்றை அறிய விரும்புகிறீர்களா? கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நூல்களை வாசியுங்கள். 1. யாழ்ப்பாணம் 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா50/=, எங்கள் நாடு ரூபா75/=, ஒரு காதலின் கதை ரூபா150/=. (22256)

## கணனி விற்பனைக்கு

DELL Brand PIII கணனி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. மாலை 5.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். தொடர்பு:- 66/3, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். வேலை நேரத்தில் தொலைபேசி: 222 5361. (C-29955)

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (22263)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுஜீபன், கலைவாணி ஒழுங்கை, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு.(22150)

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22223)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்ய பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:-
ரெலிபோன் 071-2347564
(21-19-15) (22245)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 - 08 - 1903

உதிர்வு 07 - 08 - 2003

## வேலுப்பிள்ளை துரையப்பா

குடும்பத்தின் அன்புத் தந்தையே!
குன்றாத குல் விளக்கே ஐயாவே
பண்பின் பிறப்பிடமே ஐயாவே
எங்களை விட்டு நீங்கள் பிரிந்து
திங்கள் ஒன்று சென்றாலும்
நாம் வாழும் காலம் வரை
எங்கள் நெஞ்சில் உறைந்திருப்பீர்கள் ஐயாவே!

இன்று (06.09.2003) சனிக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திக்காக சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மயில்வாகனம் பரமேஸ்வரி
- பிள்ளைகள்.
(22253)(21-15-19-22)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

உ

துன்னாலை வடக்கு, புலோலி

### மஹோற்சவ தற்காலிக கடை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு பின்வரும் கடைகள் 08.09.2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன.

கேள்விக்காரர்கள் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு கருமபீடத்தில் சமுகமளித்து தம்மைப்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/4 ஐ கருமபீடத்திற் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. ஐஸ்கிறீம் கடை 2. மிட்டாஸ் கடை

தலைவர்,
அறங்காவலர் சபை.
(C/30006) (25-)

# கண்ணீர் அஞ்சலி

எமது பற்றீஷன் நிறுவனத்தின் பதிவாளர்
திரு.G.J.தனசிங்கத்தின் மருமகன்

## கிங்ஸ்லி ஜேம்ஸ் (இந்திரன்)

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

*PATRICIAN INSTITUTES,*
*59, St. Patrick's Road,*
*Jaffna.*
*T.P.No. - 222 6148.*

அலுவலர்கள். ஆசிரியர்கள். மாணவர்கள். தொழிலாளர்கள்.
(22261)(21-15-19)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய பாசமிகு அன்னை

## திருமதி சொர்ணமலர் பாலசிங்கம்

அவர்கள் 03.09.2003 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.
(22258)(15-19-21)

# மரண அறிவித்தல்

## திருமதி சொர்ணமலர் பாலசிங்கம்

ஆலடி, உடுவிலைச் சேர்ந்த திருமதி சொர்ணமலர் பாலசிங்கம் அவர்கள் 03-09-2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரியநாயகம் - நல்லம்மாவின் மூத்த மகளும் காலஞ்சென்ற சின்னையா-கண்மணியின் மூத்த மருமகளும் அரியமலர், மகிழ்மலர், காலஞ்சென்ற அரியபாலா மற்றும் ஜெபமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசமணி மற்றும் சரஸ்வதி, பவளரத்தினம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற மருதலிங்கம் மற்றும் சோதிமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற ஜெயந்திமாலா மற்றும் ஜெகதீசன், பிரியதர்சன், தர்மினி, சத்தியசீலன், சாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் சிவானந்தமலர், விஜித்தா, முரளி, சஞ்சேய் ஆகியோரின் அன்பு மாமியாரும் ராஜ்குமார், கிருஷாந், வினோஷாந், பிரஷாந், தர்சிகா, சுவேகா, திவ்வியன், ஆரணி, அரவிந், ஆரத்தி, ஆஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.09.2003) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பிப்பீலி கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, மானிப்பாய் வீதி,
உடுவில்.
(22257)(21-15-19)

தகவல்:
**சாமினி** (மகள்)


**With 2 A/L Passes**

**Study In India - Bangalore University at**
**NATIONAL FIRST GRADE COLLEGE**
2nd Cross, Bhoopasandra, R.M.V. Extn 2nd Stage, Bangalore 94
T.P: 0091-80-3414557, 3417833 Fax : 0091-80-3615621, 3417832
E-mail : nfgc@bal.vsnl.net.in web : www.nfgcollege.com

THREE YEARS

**Bangalore University Degree**

கடந்த 10 ஆண்டுகளாக பின்வரும் பட்டப்படிப்புகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| B.Sc. | Biotechnology |
| B.Sc. | Genetics |
| B.Sc. | Micro Biology |
| B.Sc. | Computer Science |
| B.B.M. | Business Management |
| B.C.A. | Computer Application |
| B.Com+ | Computer |
| M.C.A | Computer Application |
| M.Sc. | Microbiology |
| M.Sc. | Biotechnology |
| M.B.A | in Finance |
| M.B.A | in Marketing |
| M.B.A | in Human Resources |
| M.B.A | in Management |

2003 ஐப்பசி மாதம் 4ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கண்டி குயின்ஸ் ஹோட்டலிலும் 6ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலிலும் இலவசக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 2003 ஐப்பசி மாதம் 5ஆம் திகதி காலை 10.30 மணிமுதல் மாலை 5 மணி வரை கண்டி குயின்ஸ் ஹோட்டலிலும் 6ஆம், 7ஆம் திகதிகளில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலிலும் வைத்து பல்கலைக்கழக அதிபரால்/நிர்வாக சபையால் உடனடி அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

நுண் உயிரியல் முதுமாணிப் பட்டக் கல்வியில் 100% பெறுபேறு உறுதி. சகல மாணவர்களும் பல்கலைக்கழக முதலாம், 2ஆம் தரங்களில் சித்தியெய்தியுள்ளார்கள். 350இற்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு விடுதி வசதிகள் உள்ளன. 150 இலங்கையர்கள் ஏற்கனவே பட்டம் பெற்றுள்ளார்கள். 34 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்கிறார்கள். ICCR ஊடாக மாணவர்களுக்கு இந்திய அரசின் புலமைப்பரிசில். A/L பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியெய்தியவர்களும் இணைந்து கொள்ளலாம். இதற்கான பதிவுக் கட்டணமாக US$ 400 செலுத்தி உடனடி அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பொழுதே இணைந்துகொள்ளுங்கள் அதனால் ஒரு கல்வி ஆண்டினை மீதப்படுத்திக் கொள்ளலாம். | See Career Quest Suppliment in Sunday Observer on 17.08.2003

2003/04 ஆண்டுக்கு இணைந்துகொள்வதற்கு இது இறுதிச் சந்தர்ப்பம்.
வசதியான வகையில் கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

Company Secretarial Services (pvt) Ltd. 285C 1/1, Stanley Tillakaratne Mawatha, Jubilee Post, Nugegoda.
Tel: 01-2854438 0777-387273E-mail : yapadd@sol.lk Mr.Gunawardana Res. 01-2811524 Mr.Gunasekara Res.038-2232657, 038-2234154, 078-697512
(C/29913) (22-14-16)

# கேள்வி அறிவித்தல்

**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விவரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| கல்வியங்காட்டு பொதுச் சந்தை புனரமைத்தல் | M6 | Rs.70,000/- | Rs.750/- |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட தரத்தில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீள ளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 70,000/-மும் மீளளிக்க முடியாத தொகையாக ரூபா 750 /-ஐயும் செலுத்தி 2003.09.18 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ள லாம்.
6. கேள்வி விண்ணப்ப (ஆவணம்) இணைப்பிரதிகளை யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற வேலைத் திட்ட பொறியியலாளர் காரியாலயத்தில் இருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
7. பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில், "கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைத்தல்" என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் ***"தலைவர், யாழ்.மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"*** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 2003.09.19 ஆம் திகதி பிற்பகல்2.00 மணிக்கு முன்பாக எங்களுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரி யில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். இதன் பின்னர் கேள்விகள் 2003.09.19ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத் தில் கேள்விகள் இடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்க முடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

**மாவட்ட கேள்விச்சபை,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**04.09.2003.**

(C/30021) (26-11-16)

**செ.பத்மநாதன்**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச் சபை,**
**யாழ்ப்பாணம்.**


# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, செப்.6

தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு -

**14 வயதுப் பிரிவு**

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்

**18 வயதுப் பிரிவு**

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக் கப் பாடசாலை.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

மல்லாகம் மகா வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி. (ஒ-5-86)

★ ★ ★

வலி.வடக்கு, செப்.6

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் சிவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஒ-5-86)

★ ★ ★

தெல்லிப்பழை,செப்.6

இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி யோசப்பின் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.(ஒ-150)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 44 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 7 மணிமுதல் வீரதீரப் போட்டிகளும் - பிற்பகல் 3 மணிமுதல் தலையணைச் சண்டை, மல்யுத்தம் என்பனவும் நடைபெறும்.

நாளை காலை 7 மணிமுதல் 25 மைல் சைக்கிள் ஓட்டம், 10 மைல் மரதன் ஓட்டம், கழகங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டம் மற்றும் விநோதவுடைப் போட்டி என்பன நடைபெறும். பிற்பகல் 3 மணிமுதல் கபடி, கரப்பந்தாட்ட போட்டிகள் மற்றும் பளு தூக்குதல், கயிறு இழுத்தல் என்பன நடைபெறவுள்ளன.

(ஓ-5-6)

## புதிர்ப்போட்டி ஒத்திவைப்பு

தென்மராட்சி,செப்.6

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின கணித, விஞ்ஞான பாட மாணவர்களுக்கான புதிர்ப்போட்டி எழுத்துப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முன்னர் அறிவிக்கப்பட்ட ஐந்து பாடசாலைகளிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-5-10-117)




## ஒரோண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 11 - 1930

மறைவு 18 - 08 - 2002

## திருமதி பூதப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை

திதி 06.09.2003

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா
என்றழைக்க உறவு ஒன்றில்லை
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாதம்மா
எம் ஆறாத்துயரம் . அன்பு, பண்பினை
அமைதியாய் கற்றுத்தந்து விட்டு
மீளாத்துயில் கொள்பவரே அம்மா!
காத்திருக்கிறோம் எதிர்பார்த்து உங்களை.

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்.

(22275) (32-11-16)

**உங்கள் நினைவில் உருகும்:**
**அன்புப் பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



*மூளாய் இந்து இளைஞர் மன்றம் நடத்தும்*

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி

**காலம் : நாளை (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 2.00 மணி**
**இடம் : மூளாய் சவாரித்திடல்**

**இந்த மாட்டுவண்டிச் சவாரியைக் கண்டுகளிக்க ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(22274) (25-11-16)

**- நிர்வாகம்.**



## கண்ணீர் அஞ்சலி

**போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிய**

## திருமதி சசிகலா ஸ்ரீகாந்தலிங்கம்

**அவர்கள் 04.09.2003 அன்று அகால மரணமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.**

**யா/போதனா வைத்தியசாலை**
**தா.உ. நலன்புரிச் சங்கம்**

(22264) (22-11-16)



## மரண அறிவித்தல்

### நடராசா தர்மகுலசிங்கம்

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)**

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் புலோப்பளை - பளையினை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தர்மகுலசிங்கம் (03.09.2003) புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் நடராசா - காலஞ்சென்ற சேதுப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் புலோப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் தங்கரத்தினம் (யோகம்) அவர்களின் அன்புக் கணவரும் பிறேமசுதா (கனடா) பிறேமசுயா (இத்தாலி) பிறேமசுபா, சேந்தன் (பரு.ஹாட்லிக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமார் (கனடா) லிங்கநாதன் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும் லக்ஷன் (கனடா) அவர்களின் அன்புப் பேரனும் தங்கராசா-கமலாம்பிகை, வன்னியசிங்கம் (ஜேர்மனி), பஞ்சலிங்கம், கிருஷ்ணநாதன்-வதனநிர்மலா, கணேசலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகதுரை (ஆனந்தம்), கந்தசாமி (டென்மார்க்), ஜெயராசா (இத்தாலி), சூரியகுமார் (லண்டன்), கேதாரேஸ்வரன் சோதிலட்சுமி, அலைட்றஞ்சி (லண்டன்), வரதராஜன் கௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2003) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புலோப்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோப்பளை,*
*பளை.*

(22269) (11-16)

தகவல்:
**மனைவி, மக்கள்.**

## மனதார வாழ்த்துகிறோம்

இன்று 06.09.2003இல் திருமணவாழ்வில் 25
வருடங்களை நிறைவுடன் பூர்த்திசெய்யும்
இலகடி,விநாயகமூர்த்தி ஆசிரியர் தம்பதிகளை
மனதார வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு.
-மாணிக்கவாசகர் குடும்பம்,
அல்வாய்கிழக்கு, அல்வாய். (C/30023) (11-14)

## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA

## VACANCY : LIBRARIAN

A vacancy exists for a Librarian, Preferbly with a fair knowledge of English.

Previous experience will be an added qualification.

Apply before 22nd, September, 2003

(C/30026) (11-14) Principal.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 18 |
| 01 | 08 |
| 1975 | 2002 |



திருமதி வதனி மோகனதாஸ் (சுதா)
திதி:-06.09.2003

அன்பின் சிகரமாய் அனைவருக்கும் ஆறுதலாய்
புன்னகையால் உலகாண்ட பூவையே!
ஆண்டொன்று ஆனபோதும்
ஆற்றமுடியவில்லை எம்துயரம்,
சொந்தங்கள் நாமிங்கே சேர்ந்து நிற்கையிலே,
பந்தபாசங்களைத் துறந்து பரமனடி சேர்ந்தாயோ?
உன் நீண்ட துயிலின் நினைவுகளுடன் வாழ்கின்றோம்
*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.*

67/15. தர்மலிங்கம்-அவனியு,
சீனிவாசகம் வீதி. கொட்டடி.
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
கணவர்-குடும்பத்தினர்
(வீ-மோகனதாஸ்)

(22287) (11-14-29)

## மாநகர சபை, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

மாநகர சபையால் நீர் வழங்கல் செய்வதற்கான கீழ்க்காணும் புதிய நீர் உந்தி இயந்திரங்கள் 2. அதன் இணைப்பொருள்களுடன் தேவை. இதனை விநியோகம் செய்யும் தாபனங்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இக் கேள்விகள் யாவும் 22.09.2003ஆம் திகதிக்குள் கீழ்க்காணும் விவரங்கள் அடங்கியதாக படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு கடித உறையின் இடது பக்கம், 'பி.ஒ/01/2003 நீர் உந்திகள்' என எழுதப்பட்டு *ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் (வழங்கல் அங்கீகாரம் கிடைத்து 10 நாள்களில் மாநகர சபைக் களஞ்சியத்தில் பரிசீலிக்கப்பட்டு கையளித்தல் வேண்டும்).

### SUBMERSIBLE PUMP SUPPLY FOR JAFFNA MUNICIPAL COUNCIL PUMP STATION

Submersible water pump with motor with Submersible cable with hit and necessary all fittings.

| | |
|---|---|
| Make | - German |
| Brand | - KSB |
| Type | - BPH 333/4 + HP 303 |
| Capacity | - 70M3/hr |
| Total Head | - 60M |
| Speed | - 2830 RPM |
| No. of Stages | - 4 |
| Maximum dia | - 187MM |
| Motor Rating | - 22.4Kw |
| Vottage | - 400V, 3Ph, 50Hz |
| Discharge dia | - 4" |

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்.
மாநகரசபை,
யாழ்ப்பாணம். (C/30025) (11-14)

திகதி : 08.09.2003

## வீதிகள் நிலை மோசம் என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.6

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதி, தலுவில் வீதி என்பன கடந்த 20 வருடங்களாகத் திருத்தப்படவில்லையென புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு வீதிகளையும் திருத்தக்கோரி பல தடவைகள் மானிப்பாய் பிரதேச சபையிடம் முறையிட்டும் பயன் ஏற்படவில்லை என்று தெரிவித்து அப்பகுதி மக்கள் கையொப்பம் இட்ட கடிதம் மேற்படி பிரதேச சபை செயலாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-185)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கல்வயல் (ஜே/305) மட்டுவில் மத்தி (ஜே/312) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான உடனடி மீள்குடியமர்வக் கொடுப்பனவு எதிர் வரும் 11ஆம் திகதி தொடக்கம் வங்கிகளில் வழங்கப்படவுள்ளன.

இக் கொடுப்னவு பெறுவோருக்கான கடிதங்கள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-117)

## ஆலய உண்டியல் சூறை!

சாவகச்சேரி கச்சாய் வீதி வீரபத்திரர் ஆலய உண்டியல் கடந்த திங்கட்கிழமை இரவு இனம் தெரியாதோரால்உடைக்கப்பட்டு பணம் சூறையாடப்பட்டுள்ளதாகவும்-

அத்துடன், ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க பொருளகள் சிலவும் காணாமற்போயுள்ளதாகவும்-தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு

யாழ்ப்பாணம்.செப்.6

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின வேலைவாய்ப்புத் தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நீராவியடி பிறவுண் வீதியில் உள்ள பிறைற்மன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் சுயவிரைக் கோவையுடன் சமுகந்தருமாறு செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-6)

## தையல் பயிற்சிக்கு தெரிவானோருக்கு!

யாழ்ப்பாணம், செப்.6

யாழ். றோட்டறிக்கழகமும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து கடந்த 11 ஆம் திகதி நடத்திய தொழில் வழிகாட்டி பட்டறையில், மேலதிக தையல் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## இன்றைய வெளியீடு

V.C.D Song

- காக்க காக்க
- தித்திக்குதே...
- காதல் கிசு கிசு

ஓடியோ CD
பக்தி இசைமாலை
சீர்காழி பாடியது

மூர்த்தி வீடியோ அன் எலெக்ரோனிக்ஸ்
மானிப்பாய்.
T.P. 021-2884

(C/30014) (11-14)

## ஆயுதக்கொள்வனவு தொடர்பாக விசாரிக்க அமைச்சரவைக்குழு

கொழும்பு, செப்.6

அரசின் புதிய ஆயுதக்கொள்வனவு குறித்து விசாரணை செய்ய அமைச்சரவைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் சமர்களில் ஈடுபடவென கடற்படைக்கு புதிய ஆயுதங்களைத் தெரிவுசெய்யும் விடயத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதனை அடுத்து அதுபற்றி விசாரணை செய்வதற்கு அமைச்சரவையைக் கொண்ட புதிய குழுவொன்றை அமைப்பதற்கு அரசு தீர்மானித்தது.

ஏற்கனவே இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென்று அமைச்சர்களான கரு ஜெயசூரிய, திலக்மாரப்பன மற்றும் கே. என்.சொக்ஸி ஆகியோர் அடங்கிய குழுவொன்றை அரசு நியமித்திருந்தது.

தற்போது அமைச்சர் ரவி கருணாநாயக்க முன்வைத்த ஆலோசனைக்கமைய அமைச்சரவைக் கேள்விப்பத்திரக் குழு ஒன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்படைக்கு ஆழ்கடலில் சமர் புரிவதற்கான ஆயுதங்களை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோர் எடுத்த முடிவு தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்தே இத்தகைய முடிவு தற்போது எடுக்கப்பட்டுள்ளது. இதே ஆயுதங்களை இஸ்ரேலிடமிருந்து பெற்றுக்கொள்வதனை விட அமெரிக்காவில் குறைந்த விலையில் கொள்வனவு செய்யமுடியும் என்று கருத்து வெளி யிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)

உ

## கேதார கௌரி அம்மன் கும்பாபிஷேகம்

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் நாளை (07-09-2003) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-47 மணிமுதல் 12-04 மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கௌரி விரதகாரர் மற்றும் அடியார்கள்
காலை - 8 மணி தொடக்கம் 9 மணி வரை பால் கொண்டு வந்து பால் காப்புச் சாத்தவும்.

பிரதிஷ்டா பிரதமகுரு:
பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவக்குருக்கள்
(கிரியா கிரமஜோதி)
ஆலய நித்திய பூஜகர் பிரம்மஸ்ரீ வா.ஜெயவஸ்த்தாங்கசர்மா

(22281)(11-14-32) உபயகாரர்.

## ஓராண்டு நினைவில்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 | 06 |
| 03 | 09 |
| 1950 | 2002 |



அமரர் அ.தேவதாசன் (தங்கத்துரை)

வன்னிக்காற்றிலிருந்து வந்த சேதி கேட்டு
ஓராண்டு போனதையா!
என்பும் தசையும் யுப்பிற்றஸ் குழுவுக்கென்ற
உன்மூச்சு ஓய்ந்து போனதையா!
முகம் மறைந்தாலும் அர்பணிப்பு மிக்க
உன் பணிக்கோ மரணமில்லை!
தலைவா! அழியாவுன் நினைவை நாம் சுமந்து
நிற்போம் காலமெல்லாம்!

யுப்பிற்றஸ் குழுவினர்,
பாஷையூர்.

(22283)(11-14)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. தம்பிராசா விக்னேஸ்வரன் அவர்களின்
அன்புச் சகோதரர்
**தம்பிராசா இராமலிங்கம் அவர்கள்**
மறைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அமரருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை (22284)(11-14)

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா ராசகுணசிங்கம்

### செல்வி ராசகுணசிங்கம் யசோதா

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் (IM DULSKAMP-5-44623 HERNE) ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா ராசகுணசிங்கம், ராசகுணசிங்கம் யசோதா ஆகியோர் 03.09.2003 புதன்கிழமை அகாலமரணமானார்கள்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் யகீரன், காலஞ்சென்ற யசோதா மற்றும் விஸ்நோத் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அன்னலட்சுமி, நவரத்தினம் (நவம்-மனேஜர்), ராசரத்தினம், ராசலட்சுமி, சந்திரமதி, விமலா, காலஞ்சென்ற யசீலா மற்றும் சுசீலா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை 16/3, சீனியர்ஒழுங்கை (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்) இல்லத்தில் காலை 10:00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல்கள் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/3, சீனியர் ஒழுங்கை,*
*கலட்டி,*
*வண்ணார் பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சுரேந்திரராசா
(சுரேஸ்)

(22285) (11-14-29)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் பாசத்துக்குமுரியவர்களான

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 | 03 |
| 02 | 09 |
| 1956 | 2003 |



அமரர் தம்பிஐயா ராசகுணசிங்கம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 | 03 |
| 01 | 09 |
| 1984 | 2003 |



செல்வி ராசகுணசிங்கம் யசோதா

பார்க்க முடியவில்லையே பாசம் நிறைந்த முகங்களை
வேர்க்கருவழிக்க வந்தானோ காலன் அதிவேக பஸ்வடிவில்
நீர்வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்த வேளையில்
பார் புகழ இறைவனிடம் போனீரோ எமைத் தவிக்கவிட்டு?
ஓம் சாந்தி !

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

-உறவினர்கள்.

(22289) (11-14)

# பச்சிளம் சிசுவை வயோதிப மாதிடம் கையளித்துவிட்டு கம்பி நீட்டிய பெண்!

## பண்டாரவளைப் பொலீஸார் வலை வீச்சு

பிறந்து மூன்றே வாரமான பச்சிளம் பெண் சிசு ஒன்றை முன்பின் தெரியாத வயோதிபப் பெண் ஒருவரிடம் நாசூக்காகக் கையளித்துவிட்டு மாயமானார் இளம் பெண் ஒருவர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம பண்டாரவளை பொதுமலசலகூடத்திற்கு அருகில் நிகழ்ந்துள்ளது.

சிசுவை மிகவும் கரிசனையோடு தூக்கி வந்த அழகிய இளம பெண் ஒருவர், தான் மலசல கூடத்திற்குச் செல்லவேண்டும், சிறிது நேரம் குழந்தையை வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறி, அக்குழந்தையை அங்கு நின்றுகொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரிடம் கையளித்து விட்டு மலசலகூடம் சென்றார். ஆனால், அந்த இளம் பெண் அதன் பின்னர் அவ்வழியாகத் திரும்பி வரவில்லை. வேறு வழியாக வெளியேறிவிட்டார்.

நீண்ட நேரம் சிசுவை வைத்துக் கொண்டு, சிசுவின் தாயை எதிர்பார்த்திருந்த வயோதிபப் பெண், மேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது மலசல கூடத்திற்குள் சென்று பார்த்தார். அங்கு எவரையும் காணவில்லை. இதனால் வேறு வழியின்றி பண்டாரவளைப பொலஸ் நிலையம் சென்று விடயத்தைக் கூறி பொலஸ் பொறுப்பதிகாரி யூ.சி. ராமவிக்ரமவிடம் சிசுவை ஒப்படைத்தார்.

சிசு தற்போது பண்டாரவளை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

பண்டாரவளையைச் சேர்ந்த எம். காந்திலதா என்ற வயோதிபப் பெண்ணே, மேற்படி சிசுவை பொலீஸில் ஒப்படைத்தவராவார்.

சிசுவின் தாயைக் கண்டுபிடிப்பதற்காக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் விழா

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்சங்கத்தின் தமிழ் விழா இன்று காலை 10மணிக்கு மன்றத் தலைவர் செல்வன் த.ஜெயகோபி தலைமையில் கல்லூரி கலையரங்கில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கௌரவ விருந்தினராக பழைய மாணவன் செ. திருக்குமாரனும் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வின்போது கல்லூரியில் புதிதாக அமைக்கப்பெற்ற திருவள்ளுவர்,ஔவையார் சிலைகளும் திறந்து வைக்கப்படும். (எ-72)


**லஷ்மி சினிமா** இணுவில்

ஸ்ரீகாந் த்ரிஷா வையாபுரி மற்றும் பலர் நடித்த

**மனசெல்லாம்** (ரீலஸ்) (22278)

புதிய நேரம்: 11.00, 3.00, 7.00

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், மனுஷா நடித்த

**முதல்வன்**

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

ஜாக்சன் நடித்த

**LONG KISS GOODNIGHT**

(C29905) (31-13-18)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மனோஜ், நக்கீதா, வடிவேலு, சுபாஸ் நடித்த

**ஈரநிலம்**

தினசரி காட்சிகள்: 11.00, 3.00, (பு.நே.)
திங்கள் முதல் வியாழன் வரை

**THE PEACE KEEPER**

இரவு 7.00 (பு.நே)

(31-13-18) (C29908)

**ராஜா** யாழ்ப்பாணம்

மாதவன், சிம்ரன் நடித்த

**பார்த்தாலே பரவசம்**

காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, (பு.நே.)

(C29904) (31-13-18)

**பொருளியற் கல்லூரி** யாழ்ப்பாணம்

**A/L DAY CLASS**
கலைப்பிரிவு

ஆரம்பம் - 06-09-2003
சனி - ஞாயிறு.

| | | |
|---|---|---|
| Po.Sc. | ரஜீவன் | 8 - 9 |
| Dra. | சுகந்தன் | 9 - 10 |
| Log. | R.P.சர்மா | 10 - 11 |
| Geo. | குமரன் | 11 - 12 |
| Tam. | மீரா | 12 - 1 |
| H.C. | ஜோதீஸ்வரன் | 1 - 2 |
| H.M | தரன் | 1 - 2 |
| R.C. | வசந்தன் | 1 - 2 |

வர்த்தகப்பிரிவு **DAY**

வழமையான நேரப்படி நடைபெறுகின்றன

Eco. - வரதராஜன்
Acc. - முகுந்தன்
Com - முரளி (22280) (32-11-14)

**BARATHY** சித்தன்கேணி

**A/L DAY CLASS**
நடைபெறுகின்றன

பொருளியல் - மகேந்திரன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - பசில்
தமிழ் - பாலா
அளவையியல் - R.P.சர்மா
இந்துநாகரிகம் - சுரேஸ்
இந்துசமயம் - தரன்
கிறிஸ்தவம் - வசந்தன்
புவியியல் - குமரன்
நாட.அரங். - சுதன்
ஆங்கிலம் - நிஷாந்தன்

புதிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(22279) (32-11-14)


## நெஞ்சம் மறவாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மகிழ்வில்

18

01

1975



அதிர்வில்

18

08

2002

### திருமதி மோகனதாஸ் வதனி
(சுதா)

தெய்வத் திருமகளே – வதனி
தேடக்கிடைக்காத செல்வமே
நயினை நாகபூஷனி நாள்
நாடிச் சென்றாயோ – சுதாவே
உன்னை நினைந்து உருகும்:

ந.பிரகலாதன்
(கண்ணன்)
தாவடி

(C/30031)(11-14)

கணவன், பெற்றோர், சகோதரன், சகோதரி, உற்றார், உறவினர்


உ



ஓம் விராட் விஷ்வப்பிரம்னே நம



**மங்களகரமான திறப்பு விழா அழைப்பு**

அன்புடையீர்,

நிகழும் சுபானு வருடம் ஆவணி 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (07.09.2003) உத்திராட நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுப முகூர்த்த வேளையில் சுபநேரமான 09.00-10.35 மணியளவில் எமது ஸ்தாபனமாகிய

**கீதா ஆபரண மாளிகை**

ஆரம்பிக்கப்பட உள்ளதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர் அனைவரும் வருகைதந்து இந்நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 12,
நவீன சந்தை,
சாவகச்சேரி.

(C/30028)(11-14)

உரிமையாளர்:
கந்தசாமி-ஜீவகாந்தன்,
ஜீவகாந்தனி.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி விரிவுரையாளர்
Dr.A.G.வீரசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்,

### திருமதி கிறேசம்மா வீரசிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மாணவர் மன்றம்,*
*லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்*

(22296)


**நடமாடும் இலவச கண்சிகிச்சை முகாம்**

"உங்கள் கண்களை நாங்கள் காப்போம்"

*உங்கள் கண்களை விசேட கண்பரிசோதகர்கள் மூலம் பரிசோதிப்பதற்கும்
*சகல வகையான கண்ணாடிகளை சகாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும்.
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

| பாடசாலை | திகதி | நேரம் |
|---|---|---|
| யா/சிதம்பராக் கல்லூரி | 06.09.2003 | காலை9.00 - பி.ப. 1.00 |
| யா/உடுப்பிட்டி அ.மி.க. | 06.09.2003 | பி.ப. 2.00 - 6.00 |
| யா/நேவரையாளி இந்துக்கல்லூரி | 08.09.2003 | காலை9.00 - 1.00 |
| யா/வடமத்திய மகளிர் கல்லூரி | 08.09.2003 | பி.ப. 2.00 - 6.00 |
| யா/விக்னேஸ்வராக் கல்லூரி | 09.09.2003 | காலை9.00 - 1.00 |
| யா/நெல்லியடி ம.ம.வி. | 09.09.2003 | பி.ப. 2.00 - 6.00 |
| யா/அச்சுவேலி மத்திய கல்லூரி | 10.09.2003 | காலை9.00 - 1.00 |
| யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் | 10.09.2003 | பி.ப. 2.00 - 6.00 |

★17-06-2003 முதல் 24-06-2003 வரை எம்மிடம் பதிவு செய்து கண்ணாடி பெறாதவர்களும் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளலாம்.

*அனுசரணை:*



**ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்**

*(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)*

இல. 54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு-02.

(C/30029)(11-14)


## மரண அறிவித்தல்கள்

### அப்புத்துரை பரராஜசிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பரராஜசிங்கம் நேற்று (05.09.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (இத்தாலி), நவரட்ணராஜா(கொழும்பு), அருந்தவமலர்(இத்தாலி), பவளமலர், காலஞ்சென்ற போகராஜா, மனோகரராஜா மற்றும் சவுந்தர்ராஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பகவதி அம்மாள் (பிரான்ஸ்), மலர்க்கொடி(கொழும்பு), நேசகுமாரன்(இத்தாலி), காலஞ்சென்ற சோமசுந்தரம்(சுருவில்) மற்றும் சுகிர்தா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

(22292)(11-14)

தகவல்:
மனைவி

### சிவப்பிரகாசம் இராஜசூரியர்
(ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் இராஜசூரியர் அவர்கள் நேற்று (05.09.2003) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணி - இராஜசூரியரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அமுதலிங்கம், சொர்ணலிங்கம், கனகசூரியர், செல்வநாதன் திருவிளங்கம், தனஞ்செயராஜன் மற்றும் சிற்றம்பலன் - ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரரும் சிவகுமாரன், சிவாநிதி, தயாநிதி, ஈஸ்வரகுமாரன், குணநிதி, சாந்தநிதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுந்தரலிங்கம், ஞானப்பிரகாசம், யுவபாலசிங்கம், சாந்திக்குமார், கங்காதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயபால், முரதீசன், சுதாகரன் ஆகியோரின் பேரனும் செந்துரு, சோபனா, கவிதா, வனஜா, வானதி, அனித்தா, அகிலன், வினுத்தா, விவேகா, திவ்யா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் கஸ்ருதி, அக்சரா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/4 A. பீரிஸ் றோட்,*
*மவுண்ட்லவெனியா.*

(C/30030)(11-14)

*தகவல்: யுவபாலசிங்கம் (மருமகன்)*

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றொபேட் றெயிட் தலைமையிலான குழுவே இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை அரசின் உயர் அதிகாரிகளையும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவிருக்கிறது. தமது அணியின் செயற்பாடுகளை இலங்கையில் மீள ஆரம்பிப்பதற்காக இங்குள்ள அறிவியல், பாதுகாப்பு மற்றும் சூழல் கட்டுமானங்கள் குறித்து இக்குழு மதிப்பீடு செய்யும். இந்த மதிப்பீட்டுக் குழு நாட்டின் பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்யவும் இருக்கிறது. (ஐ)

## பிரிட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்களின் செயற்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்படும். அப்போது விடுதலைப் புலிகள் அமைப்பு எமது எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யும் பட்சத்தில் அதன் மீதான தடை நீக்கப்படலாம்.

விடுதலைப் புலிகள் மீதான தடை சட்டத்துடன் தொடர்புடையது. அரசியலுடன் சம்பந்தப்பட்டதல்ல. ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், புலிகள் மீதான தடை உத்தரவு அப்படியே இருக்கும்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் யுத்தம் மூலம் பூர்த்தியாகாது. சமாதானம் மூலமே அது சாத்தியமாகும். அரசியல் வாதிகள் கூடி ஆராய்ந்து தீர்வுக்காக முயற்சிக்கும் அதேநேரம், மக்கள் மனங்களில் இருந்து சமாதானம் பிறக்கவேண்டும். இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு, பரஸ்பரம் சமாதானம் மூலம் உருவாக வேண்டும்.

நேர்மையான வழிமுறையில் பிரிட்டனுக்கு வரும் இலங்கையர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படும். அதை விடுத்து குறுக்கு வழியில் வருபவர்களுக்கு எந்த உதவியும் வழங்கப்படமாட்டாது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், நடைமுறையில் இருக்கும் கொள்கைகளில் மாற்றம் ஏற்படமாட்டாது.

இலங்கையில் சமாதானம் நிலைபெறுவதற்கு எமது பங்களிப்பு தொடரும் தேவையான உதவிகளை தொடர்ந்து வழங்குவோம்-என்றார் அவர்.(ஐ-3)

## அடக்க நினைத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் சிந்திக்க வேண்டும். சிங்கள இனவாத அரசுகள் எதை, எதை எமக்கு எதிராக நடத்தினார்களோ, அவற்றுக்கு எதிர்மறையாகத் தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் நாம் எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

தந்தை செல்வாவின் காலத்தில் அஹிம்சை ரீதியான போராட்டம் தொடங்கி, அது பயன்தராத நிலையில்தான் நாம் ஆயுதம் தூக்க நேரிட்டது. அன்று செல்வா அவர்கள் தமிழ் மக்களைக் காப்பாற்ற கடவுள்தான் உதவவேண்டும் அல்லது தமிழர் ஆயுதம் தூக்கவேண்டும் என்று தீர்க்க தரிசனமாகக் கூறினார். அப்பாவி மக்களைக் கொல்வதனால் அடக்கி ஒடுக்கிவிட முடியாது. விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் தமிழ்மக்களே, இதில் இவர்களுக்குப் பாரிய பொறுப்பும், கடமையும் உண்டு.

வீரத் தமிழர்களாகிய நாம், எம்மைக் காப்பாற்ற தர்ம யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம். இதை நாம் இராஜதந்திர ரீதியில் முன்னெடுத்துச் செல்கின்றோம். அடுத்த சந்ததி நிம்மதியாகவாழ எம்மை நாம் அர்ப்பணிக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் சுமார் 10 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் மட்டக்களப்பு மாவட்டத்திலேயாகும். இந்தப் படுகொலைகள் நிறுத்தப்பட்டு உரிமைகளும் நீதியும் ஏற்படுத்துவதற்கு மக்கள் விழிப்புணர்வுபெற்று எழுச்சி பெறவேண்டும்.

செம்மணிப் புதைகுழிக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரி வெளிநாட்டில் இலங்கைத் தூதுவராக இருக்கிறார். இதுதான் சிங்கள அரசால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட நீதியாகும். இதை எல்லாம் தமிழர்கள் மறக்க மாட்டார்கள். வடக்கு-கிழக்கைக் காப்பாற்ற விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல, தமிழர்களுக்கும் உரிமையும் கடமையும் இருக்கின்றன.

பேச்சுக்கள் தற்போது பின்தள்ளப்பட்டுள்ளன. ஏனெனில், பேசிய விடயங்கள் அமுல்படுத்தப்படவில்லை. விடுதலைப் புலிகளிடம் சட்டரீதியான அதிகாரங்களை அரசு எப்போது கொடுக்கப்போகின்றது?

வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். சில முஸ்லிம் தலைமைத்துவங்கள் ஆட்சிபீடம் ஏறுவதற்காக இன உறவைச் சீர்குலைக்கும் துர்ப்பாக்கிய நிலை மாறவேண்டும். வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகமாகும். இதை மாற்ற முறபடுவோர் தகுந்த தண்டனையை அனுபவிக்க வேண்டிவரும்.

- இப்படி அவர் கூறினார்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார்-கிரண் நடித்த
★ திவான் ★
(CD, பிரதிகள் உடன் பெறலாம்)
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு.
T.P.-0777 178155
(32-11-17) (22291)

## புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் பயிற்றப்பட்ட ஆயிரம் தாதியா வைத்தியசாலைகளில் நியமனம் பெறுவர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் சேவையாற்ற 35ஆயிரம் தாதிமார் தேவைப்படுகின்றனர். இருந்தும் இப்போது 17ஆயிரம் தாதிகளே வேலையிலிருக்கின்றனர் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத் தேசியக் கொடியைமட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஏற்றினார்.

இதுவரை காலமும் ஸ்ரீலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்படவிருக்கும் தூபிக்கான அடிக்கல்லை வந்தாறு மூலைப் படுகொலையில் தனது 4 பிள்ளைக்களைப் பறிகொடுத்த தந்தையாரான சண்முகம் இராசையா நட்டுவைத்தார்.

பொதுக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமை வகித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ரவிராஜ், செல்வம் அடைக்கலநாதன், சந்திரநேரு, அரியநாயகம், கிருஸ்ணபிள்ளை மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் சிறப்புரையாற்றினார். (எ-4)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நாடு அரச கட்டுப்பாட்டுப் பகுதி, புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்த ஏற்பாடுகளையும் மீறும் புலிகள், இன்று அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலும் தமது முகாம்களை அமைத்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புலிகள் 13 புதிய முகாம்களை திருமலையில் அமைத்துள்ளனர். அல்லக்கந்த, கூனித்தீவு, கட்டைபறிச்சான், நாவலடி, கந்தல்காடு, உப்பாறு, குரங்குபாய்ஞ்சான் ஆகிய இடங்களில் தலா ஒரு முகாமும் சின்னக்கிண்ணியாவில் இரண்டு முகாம்களும், சம்பூரில் 4 முகாம்களும் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் உள்ள நவீன ஆயுதங்கள் மூலம் திருகோணமலையில் உள்ள துறைமுகம், விமானநிலையம், இராணுவ முகாம்கள், எண்ணெய்க் குதங்கள் என்பவற்றைப் புலிகளால் இலகுவாகத் தாக்கமுடியும். புலிகளின் கரும்புலித் தற்கொலைப் படையாளிகளும் இந்த முகாம்களில் தயாராகவுள்ளனர்.

இவ்வாறாக ஒரு சூழ்நிலையால் நாட்டின் இறைமை மற்றும் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை நமது நாட்டின் பாதுகாப்பை மட்டுமல்லாது எமது பிராந்தியத்தின் பாதுகாப்பையுமே கேள்விக் குறியாக்கியுள்ளது.

திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாம் சம்பந்தமான சர்ச்சையில் கண்காணிப்புக்குழு வலியுறுத்திக் கூறியும் புலிகள் முகாமை விட்டு அகலுவதாக இல்லை.

இந்தச் சூழ்நிலை சமாதான செயற்பாட்டுக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும் என எச்சரித்தும், அவர்கள் அந்த முகாமை வாபஸ் பெறாதமை அவர்கள் சமாதானத்தின் மீது பற்றற்றவர்கள் என்பதை சர்வதேச சமூகத்துக்கு பறைசாற்றியுள்ளது.

இவ்வளவு நிகழ்ந்தும் - இவ்வளவு அச்சுறுத்தல் நிலை உருவாகியுள்ள போதும் ஒன்றும் நடக்காதது போல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு மௌனம் சாதிக்கின்றது. இந்த நிலைமையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் சேர்ந்து மூடிமறைக்க முனைகின்றனர். இந்த அச்சுறுத்தல் நிலைமைக்கு முழுப்பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் அவர்களே. இத்தகைய - முதுகெலும்பு இல்லாத - அரசை வெகுவிரைவில் மக்களுடன் இணைந்து நாம் தூக்கி யெறியவுள்ளோம் - என்றார் சரத் அமுனுகம. (ஐ)

## தமிழீழ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களில் 6,7,8ஆம் வகுப்புகளில் சமூகக்கல்வியும் வரலாறும் போதிக்கும் 120 ஆசிரியர்கள் செயலமர்வில் கலந்துகொண்டனர்.

தேசியக்கொடி ஏற்றப்பட்ட பின் பேராசியர் சண்முகதாஸ், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம், கல்விக்கழக நிர்வாகப் பொறுப்பாளர் இழவழுதி ஆகியோர் ஈகச் சுடர் ஏற்றி செயலமர்வை ஆரம்பித்துவைத்தனர்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமாரின்
★ திவான்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
(32) யாழ்ப்பாணம். (22293)

## இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிகேடியர் சனத் கருணாரட்ன 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நீண்ட காலம் இராணுவப் பேச்சாளராகக் கடமையாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய இராணுவப் பேச்சாளரான கேணல் சுமேத பெரேரா இம்மாதம் நடுப்பகுதியில் தமது பொறுப்பை ஏற்பார் என்று இராணுவத் தகவல் பிரிவு தெரிவித்தது.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார், கிரண் நடித்த
★ திவான்
10 மணி முதல் CD களும் பிரதிகளும் பெற்றுக்கொள்ளலாம்.
திவான். இன்று. காதல்கொட்சாம் போஸ்ரர்களும் விற்பனைக்கு உண்டு.
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்
சோலை வீடியோ
நெல்லியடி.
(C30032) (32)

பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம் - 2003 -2004
2003-2004 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப் படிவம் ஞாயிற்றுக்கிழமை (07.09.2003) காலைமுதல் விநியோகம் செய்யப்படும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/30027)
(29-11-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா தங்கச்சிப்பிள்ளை

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் மாரீசன் கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தங்கச்சிப்பிள்ளை நேற்று (05.09.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் பூமணி (ஏழாலை தெற்கு), சின்னத்துரை (வவுனியா), தங்கராஜா (ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பல்பொருள் அங்காடி, ஆவரங்கால்) ஆகியோரின் தாயாரும் துரைசிங்கம் இந்திராணி, மனோன்மணி (உப தபால் அதிபர், ஆவரங்கால்) ஆகியோரின் மாமியாரும் விஜிதா (இந்தியா), றஞ்சினி, குணேந்திரன் (சிந்துஜா வெதுப்பகம், ஏழாலை தெற்கு), கரன் (குட்டி), ரவி, கவிதா, றேகன், சபேசன், றமேஸ், ஆசா, தர்சன், அனுலா, ஜீவனா, நீபன், வைஸ்ணவி, விதுசனா ஆகியோரின் பேத்தியும் சிந்துஜா, குகராஜ், மகிழினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2003) சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீ நாகபூஷணி அம்மன்*
*பல்பொருள் அங்காடி,*
*ஆவரங்கால்.* (22299)(32-11-14)

தகவல்:
**க.தங்கராஜா.**

### சுந்தரம்பிள்ளை பொன்னம்மா

(இளைப்பாறிய P.W.D.ஓவசியர்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை - பொன்னம்மா 03.09.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும் குழந்தைவேலு, பராசக்தி, உமாசக்தி, குகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.s.பஞ்சலிங்கம் (பூந்தோட்டம், வவுனியா), Dr.சிவயோகநாதன் (லண்டன்), கிருஸ்ணாவேணி, சுகந்தி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் சோதிநாதன் (கனடா), ஜெகநாதன் (சுவிஸ்), யோகநாதன் (இந்தியா), பஞ்சநாதன் (கனடா), பிரதீபன் - கலாரஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2003) ஞாயிறு காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாயில் உள்ள பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (C/30033)(11-14)

தகவல்:
சங்கரப்பிள்ளை குழந்தைவேலு
(மகன்)

ஈசன்
கல்வி நிலையம்
கணக்கீடு
A/L 2005
கட்டுப்பாட்டுக்கணக்கு
SAT,SUN:3.00 P.M.
திரு.பாலவாசன்
B.B.A(FM Spl.)
ஆரம்பம்:07.09.2003(SUN)
(22287)(11-17)

### மரண அறிவித்தல்

#### சண்முகம் இரத்தினசபாபதி

(பிரபல புகையிலை வியாபாரி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இரத்தினசபாபதி (05.09.2003) நேற்றிரவு காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக கணவரும் வரதராஜா, தவராஜா, காலஞ்சென்ற தவமணிதேவி, பாலராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள இன்று (06.09.2003) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல திருநெல்வேலி இந்து மயானததில் அடக்கம் செய்யப்படும் இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

(22300) (14-17) தகவல்:
பாலராஜா (மகன்)
*திருநெல்வேலி* (JBR.பிக்சர் பலஸ்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, ஸ்ரீநாமகள் வித்தியாலயம் - கொக்குவில், சரவணை சைவப்பிரகாச வித்தியாலயம், ஆத்திசூடி வித்தியாசாலை - வேலணை, சிந்மய பாரதி வித்தியாலயம் - மானிப்பாய், இராமகிருஷ்ண வித்தியாலயம் - கொக்குவில்)**

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியை வதிவிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற ஆசிரியையுமான திருமதி கமலாதேவி பூபாலசிங்கம் 03.09.2003 புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் பூபாலசிங்கம் (முன்னாள் முகாமையாளர், வின்சர், றீகல் படமாளிகைகள், அருண்ஸ் ஸ்போர்ட் ஸ்பெட்-யாழ்.) அவர்களின் அருமை மனைவியும் பொன்னையா - பொன்னாச்சி தம்பதிகளின் அருமை மகளும கந்தையா - நல்லம்மா தம்பதிகளின் அருமை மருமகளும் சுமித்திரா (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பிறேம்குமார் (லண்டன்), நளினா (யாழ். பல்கலைக்கழகம், வவுனியா வளாகம்) ஆகியோரின் அன்புத தாயாரும் பிரசாத் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அருமை மாமியும் பத்மநாதன் (கொழும்பு), பேரின்பநாயகம் (NECORO - வவுனியா), வைத்தியகலாநிதி கனகநாயகம் (மாவத்தகம, போதனா வைத்தியசாலை - குருநாகல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஹம்சாயினியின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணயளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*64/2, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
T.P-021-222-6467 (C/30020) (29-11-14)

தகவல்:
க. பூபாலசிங்கம்
(கணவர்)

### V.T.கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்-மீசாலை)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட V.T. கனகரத்தினம் அவர்கள் நேற்று (05.09.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் V.T.பொன்னம்பலம் (தபால் ஊழியர்), V.T.நடராஜா (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னபூபதியின் அன்புக் கணவரும் தேவரதி (ஆசிரியர்,யா/கச்சாய் அ.த.க), தேவதர்சினி (ஆசிரியா கலாசாலை - பலாலி), தேவநந்தினி (மருந்தாளர் - சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியத்தின் (ஆசிரியர், புற்றளை மகாவித்தியாலயம், புலோலி) மாமனாரும் லோஜிதனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (22298) (29-11-14)

தகவல்:
அன்னபூபதி (மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.